www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමී

Puthiya Poomi

சுற்று 13 நவம்பர் 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 97

# ஜெனீவா பேச்சுவார்த்தை மக்களுக்குத் தோல்வி

## ஏ- 9 பாதை திறக்க

## அரசாங்கம் மறுப்பதேன்?



நிமால் சிறிபால டி சில்வாவை சமாதானப்படுத்தும் போவார்

கடந்த 28ம் 29ம் திகதிகளில் ஜெனீவாவில் இடம் பெற்ற இரண்டாவது பேச்சுவார்த்தை எவ்வித முடிவையும் எட்டமுடியாத நிலையில் முறிவடைந்து விட்டது. அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தத்தமது நிலைப்பாடுகளில் இருந்து விட்டுக்கொடுப்புச் செய்ய மறுத்த சூழலில் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதனால் இப்பேச்சுவார்த்தையை ஏதோ ஒரு வழி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்த வடக்கு கிழக்கு மக்களுக்கும் சமாதானத்தை விரும்பும் ஏனைய மக்களுக்கும் மிகுந்த ஏமாற்றத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இப் பேச்சுவார்த்தையின் தோல்வியானது முழு அளவிலான யுத்தத்தையும் அதன் ஊடாக அந்நியப் படைகள் தரையிறங்கக் கூடிய அபாயத்தையும் தோற்றுவித்துள்ளது.

பேச்சுவார்த்தையிலும் அதற்கு காரணமான யுத்தமாக்கப்பட்ட தேசிய இனப்பிரச்சினையிலும் அரசாங்கம் விடுதலைப்புலிகள், சர்வதேச சமூகம் ஆகிய முத்தரப்பினர் சம்பந்தப்பட்டுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தத்தமக்குரிய சொந்த நிகழ்ச்சி நிரல் உண்டு. அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து தத்தமது நிலைகளை அழுத்தி நிற்பதிலுமே அதிக அக்கறைகாட்டி நிற்கின்றனர். ஆனால் யுத்தத்தாலும் படுகொலைகளாலும் இடப்பெயர்வுகளாலும் ஏனைய இடர்பாடுகளாலும் அவலங்களைச் சுமந்து நிற்கும் வடக்கு கிழக்கு மக்கள் பற்றியோ அவற்றை முடிவுக்கு கொண்டு வரும் வகையிலான தீர்வு பற்றியோ இவர்கள் எவ்வித கரிசனையும் காட்டுவதாக இல்லை என்ற கவலைக்குரிய நிலையே காணப்படுகிறது.

அரசாங்கம் கடந்த ஆகஸ்ட் 11ம் திகதியிலிருந்து ஏ9 பாதையை மூடிவிட்டது. 2002ம் ஆண்டு அன்றைய அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இன்றைய அரசாங்கமும் ஏற்றுக்கொள்வதாகவே கூறி வருகின்றது. யுத்த நிறுத்த மீறல்கள் மத்தியிலும் அவ் யுத்த நிறுத்த ஒப்பந்தம் இருப்பதாக ஏற்றுக்கொள்ளும் அரசாங்கம் அதே புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் திறக்கப்பட்ட ஏ 9 பாதையை மூடியதன் மூலம் மிகப் பெரிய ஒப்பந்த மீறலைச் செய்திருக்கிறது. அதுமட்டுமன்றி அவ் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அன்றைய பிரதமர் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் ஜனாதிபதி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு வந்து இருகட்சி இணக்கப்பாட்டையும் கண்டிருக்கிறார்கள்.


இந்நிலையில் ஏ9 பாதையைத் திறக்க மாட்டோம் என அரசாங்கம் மறுத்து நிற்பதன் உள்நோக்கம் என்ன? இதன் மூலம் பாரிய ராணுவ நகர்வையும் யுத்தத்தையும் அரசாங்கம் முன்னெடுக்கப் போகின்றதா என்ற ஐயம் எழுந்துள்ளது. அதற்கு அமைவாக தரைவழிப் பாதைக்குப் பதிலாக கடல் போக்குவரத்தை வற்புறுத்துவதன் மூலம் பாதுகாப்பான ராணுவ விநியோகப் பாதையை உறுதிப்படுத்திக் கொள்ளவே அரசாங்கம் மும்மரம் காட்டி நிற்கின்றது என்பதும் தெளிவாகின்றது.

அரசர்ங்கம் பேச்சுவார்த்தை சமாதானத் தீர்வு எனக் கூறிக் கொண்டு ராணுவத் தீர்வையே முனைப்பாக்கி வருகின்றது. விடுதலைப்புலிகள் இயக்கத்தை ராணுவ ரீதியில் அழித்து விடலாம் என்ற நம்பிக்கையிலேயே அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல் அமைந்துள்ளது. பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு என்பதெல்லாம் ஒருவகையான காலம் கடத்தி ஏமாற்றும் முயற்சிகளேயாகும். தோல்வியடைந்த ஜெனிவாப் பேச்சுவார்த்தை மேசையில் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வை வற்புறுத்திய

தொடர்ச்சி 12ம் பக்கம் ➡



உணவுக்கு நாம் எங்கே போவது?



பசி தீர்க்க பார்த்திருக்கும் சிறுமி

## தோ. கம்பனிகளுக்கு விலை போகிறவர்களால் சம்பள உயர்வைப் பெற முடியாது

தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளம் ரூ 195/= ஆக இருக்க வேண்டும். எனவும் மொத்தசம்பளம் ரூ 300/= ஆக இருக்க வேண்டுமெனவும் பெருந்தோட்ட கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு வருகின்ற தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

தோட்டக்கம்பெனிகள் நாளாந்த அடிப்படை சம்பளத்தை ரூபா 145/= உயர்த்துவதற்கே விருப்பம் தெரிவித்துள்ளன. அவை மொத்தசம்பளத்தை ரூ 175/= மேல் வழங்குவதற்கு தயாராக இல்லை.

தோட்டத்தொழிற்சங்கங்கள் ரூ 300 ஐ வழங்க வேண்டுமென வற்புறுத்தப்போவதில்லை. தோட்டக்கம்பெனிகள் முன்வைத்துள்ள சம்பளத்தினை ஏற்றுக்கொள்ளும் தொழிற்சங்கங்கங்கள் இருக்கின்றன என்பது தெரிந்தவிடயமே. தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள தொகை என்னவென்றோ கம்பெனிகள் முன்வைத்துள்ள தொகை என்னவென்றோ இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. அதிலிருந்து தொழிற்சங்கங்களினது உள்நோக்கத்தையும் நாம் புரிந்து கொள்ளமுடியும். தொழிற்சங்கங்களோ கம்பெனிகளோ எதனையும் வெளிப்படுத்துவதற்கு தயாராக இல்லை.

தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தை அவர்களை சுரண்டி கொழுக்கின்ற கம்பெனிகளே தீர்மானிக்கின்றன. தொழிலாளர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவகையில் தொழிற்சங்கள் நடந்து கொள்ளவில்லை.

தோட்டக் கம்பெனிகளிடம் விலை போகின்ற தொழிற்சங்கங்களாலும் தொழிற்சங்கத் தலைமைகளாலும் நியாயமான சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்க முடியாது.

தோட்டத்தொழிலாளர்கள் தமது சம்பளம் உட்பட ஏனைய உரிமைகளை உறுதியான போராட்டங்களினால் வென்றெடுக்கக் கூடிய சரியான தொழிற்சங்கத்தை கட்டியெழுப்புவதன் மூலமே கம்பெனிகளின் ஆதிக்கத்தை முறியடிக்க முடியும். உரிமைகளை வென்றெடுக்க முடியும்.



கொட்டும் மழையில் உணவுப் பொருட்களுக்கு மக்கள் வரிசையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



## நாலு நடக்கும் உலகிலே

நற்குணன்

### தன் முதுகு ஒரு போதும்....

தனது சகோதரி ஒரு விபசார விடுதியை நடத்துகிற விடயம் அம்பலமானவுடன் ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்கா அரசியல்வாதிகளை விட விபசாரிகள் மேலானவர்கள் என்று கெட்டித்தனமாகச் சொல்லிவிட்டார். ஆனால் விடுதிக்காரர்களை ஒப்பிட வேண்டியது ஜே.வி.பி யினது பேரினவாத அரசியல் விபச்சாரத்துடனும் தான். தனது சகோதரி நடத்தும் கவரவமான நிறுவனம் பற்றி அவர் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதற்கு இரண்டு வாரங்கட்கு முன்னர் தான் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் கூட்டாளிக்கு வலை விரிக்கிற விபசாரியுடன் ஒப்பிட்டுப் பேசியிருந்தார். தன் முதுகு ஒருபோதும் தனக்குத் தெரியாது என்பது பழமொழி.

### ராதிகா கோலா!

தமிழ் மக்களின் அறிவுத் தேக்கத்தை உறுதிப் படுத்தி அதையே மூலத்தனமாக்கித் தான் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் நடக்கின்றன. அதில் வெற்றி பெற்றவர்களுள் முக்கியமான ஒருவர் ராதிகா. அவருடைய அப்பா எம். ஆர். ராதா சினிமாவில் வில்லன், நிசமான வாழ்வில் கொள்கைப் பிடிப்புள்ள பகுத்தறிவுவாதி. ராதிகா சினிமாவில் கதாநாயகி. வாழ்வில் பூரணமான வியாபாரி.

தமிழகத்தில் பெப்ஸிக்கும் கோக்குக்கும் எதிரான போராட்டம் கொஞ் சம் சூடு பிடிக்கத் தொடங்கிய கையோடேயே பெப்சியும் கோக்கும் சினிமாக்காரர்களைப் போட்டு தங்கள் பானங்களால் உடல் நலத்துக்குக் கெடுதல் இல்லை என்று விளம்பரம் செய்கிறா ர்கள். விளம்பரத்திற்கு உடன்பட மறுத்த சில நடிகர்கள் உள்ளனர். ராதிகா அவர்களுள் ஒருவர் அல்ல. தான் தினமும் கொக்காகோலா குடிப்பதாகவும் அதனால் ஒரு கெடுதலும் இல்லை என்றும் விளம்பரத்தில் சொல்லியிருக்கிறார். உண்மையில் கொக்காகோலா உடலுக்குக் கெடுலானது. ராதிகாவின் டி. வி தொடர்கள் மூளைக்குக் கெடுதலானவை.

### ஞான மொழிகள்

ஞானம் என்கிற 2006 ஒக்ரோபர் இதழில் கம்பவாரிதி எனச் சிலரால் அழைக்கப்படுகிற இ. ஜெயராஜ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்குகிற கவரவப்பட்டங்களை விளாசித்தள்ளியுள்ளார். அதே இதழில் முல்லைமணி எனத் தெரியப்படும் வே.சுப்பிரமணியம் ஜே.பி. என்பவருக்கு அதே பல்கலைக்கழகம் வழங்கிய 'கலாநிதி' பட்டம் பற்றித் தன்னைக் கவிமாமணி என அழைத்துக் கொள்கிற ஒருவர் எழுதிய பாராட்டுக் குறிப்பும் இருந்தது. அவரது தகுதிகள் எப்படியாக இருந்த போதும் வடக்கு- கிழக்கின் பல்கழைக்கழகங்கள் அண்மைக் காலங்களில் வழங்கி வந்துள்ள கலாநிதிப் பட்டங்களை ஒட்டுமொத்த மாக நோக்கும் போது அவர்களிடம் பட்டம் பெறாமலிருப்பது உன்னதமான தகுதி என்றே தான் தோன்றுகிறது. டொமினிக் ஜீவாவின் மிக உயர்ந்த இலக்கியத் தகுதியும் அதுவாகவே இருக்கக் கூடும்.

### தமிழ் ஊடக நோய்

தினக்குரல் 16. 10. 06 இதழில் கியூபாவின் தலைவர் கஸ்ரோவின் ஆட்சிபற்றிய ஒரு அவதூறான அரசியற் கட்டுரை இருந்தது. எழு தியவரது பேர் இல்லாத அந்தக் கட்டுரையில் "கஸ்ரோவின் கைக்குள் இருந்து செயல்படும் 30 வயது முதல் 35 வயது கொண்ட அதிகார வர்க்கம் எதிர்காலத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும் சக்தியாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்றும் கூறப்பட்டிருந்தது. முழுக் கட்டுரையின் ஏக்கமும் கஸ்ரோ போன பிறகு கியூபாவில் கஸ்ரோவை மறுதலிக்கிற விதமான மாற்றம் வரவேண்டும் என்கிறது தான். சொல்லப்போனால் வழமையான அமெரிக்கப் பொய்ப்பிரசாரமொன்றின் கொச்சையான தமிழ் வடிவம் தான் அது. அவ்வாறே ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் பற்றிய நேர்மையான மதிப்பீடுகளைக் காணுவது கடினமாகவே உள்ளது. நேபாள விடுதலைப் போராளிகளைக் கொச்சைப்படுத்தியும் செய்திக்குறிப்பு க்கள் தினக்குரலில் பல வந்துள்ளன. வடகொரியா, ஈரான் போன்ற நாடுகட்கு எதிரான மேலை நாட்டு முதலாளிய ஊடகக் கருத்துக்கள் விசாரணையின்றி வெளியிடப்படுகிறன. இந்நிலை தினக்குரலுக்கு மட்டுமன்றி தமிழ் ஊடகங்களுக்குரிய பொது வான போக்குமாகும்.

இது தமிழ் ஊடகத் துறையின் நீண்ட கால நோயொன்றின் தொடர்ச்சியா? பொதுவாக ஏகாதிபத்தியச் சார்பாகவே தமிழ் ஊடகங்கள் செய்திகளை வழங்கப் பழக்கப்பட்டுள்ளன. இந்தியாவைக் குற்றஞ் சொல்லாத விதமாகவே உலக நிகழ்வுகளைத் தமிழ் மக்களுக்கு வழங்கி வந்துள்ளன. இன்னமும் தமிழகத் தலைமைகள் பற்றிய கனவுகளை வளர்க்கின்றன. கடந்த இருபது ஆண்டுகளில் எதையும் அவை கற்கவில்லை என்றால் அதற்குத் தடையாக இருப்பது ஒரு பழமைவாத ஆதிக்கச் சிந்தனையல்லாமல் வேறெதாக இருக்க முடியும்? ஒரு வேளை இணையத்தளங்களில் இருந்து கிடைக்கிற ஊழலல்களின் உண்மை பொய்களை விசாரித்து அறிய இயலாத சோம்பேறித்தனமாகவும் இருக்க முடியுமா?

## பட்டினிச் சாவின் விளிம்பில் வடபிரதேசம்

### அரிசி 170ரூபா சீனி 400 ரூபா தீப்பெட்டி 20/= பால்மா 600ரூபா

தற்போது வடபிரதேசம் துண்டிக்கப்பட்ட நிலப்பரப்பாக இருந்து வருகின்றது. அதேவேளை யுத்த நிறுத்தத்தின் கீழான யுத்தத்தால் மக்கள் கொல்லப்படுவதும் படுகாயங்கள்படுவதும் இடப் பெயர்வுகளுக்கு உள்ளாவதும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. தமிழ் மக்களைப் பொறுத்த வரை இவை கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் தொடர்ச்சியாக அனுபவித்து வந்தவை தான். ஆனால் தற்போதைய அவலம் போன்று முன் எப்பொழுதும் ஏற்பட்டதில்லை. இதில் இரண்டு விடயங்கள் கவனத்திற்குரியன. ஒன்று பழிக்குப் பழியான படுகொலைகள் ஆட்கடத்தல்கள் தாராளமாக நடாத்தப்படுவது. இரண்டாவது மக்களின் அன்றாட வாழ்வுக்குரிய அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைக்க முடியாத நிலை. கிடைப்பதாயினும் அவை பல பத்து மடங்கில் கள்ளச் சந்தையில் விற்கப்படுகின்றன. அரிசி, சீனி, மா, குழந்தைகளின் பால்மா போன்றன. மக்கள் வாங்க முடியாத உயர் விலைகளில் மட்டுமே கிடைக்கின்றன பணப்புழக்கம் உள்ள சிலரினால் கூட அறாவிலை கொடுத்தும் அத்தியாவசியப் பொருட்களை வாங்க முடியவில்லை என்றால் சாதாரண மக்களான அன்றாட உழைப்பாளர்களால் பட்டினி கிடப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்ற நிலையே காணப்படுகிறது.

கடந்த ஆகஸ்ட் 11ம் திகதி வடபகுதிக்கான ஏ9 பாதை மூடப்பட்டது. அத்துடன் பிரகடனப்படுத் தப்படாத யுத்தம் மேலும் தீவிரமடைந்தது. அன்றிலிருந்து வடபகுதி மக்களை வாட்டிவதைத்து பழிவாங்குவது என்ற உள் நோக்கத்துடன் அரசாங்கம் நடந்து வருகின்றது. ஆறு லட்சம் மக்கள் வாழும் குடா நாட்டிற்கு ஒன்று இரண்டு கப்பலில் கொண்டு செல்லப்பட்ட உணவுப் பொருட்கள் எந்த மூலைக்குப் போதுமானது. வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று கிலோ. அரிசி ஒரு குடும்பத்திற்கு என்றால் எப்படி உயிர்வாழ முடியும். பசியின் கொடுமையால் மக்கள் பரிதவிக்கிறார்கள். பச்சிளம் குழந்தைகள் பால்மா பெற முடியாத அவலத்தில் உள்ளார்கள். நோய்களுக்குரிய மருந்துகள் வைத்தியசாலைகளில் பெற முடியவில்லை. எரிபொருள் கிடைக்காமையும் பெருவிலையும் போக்குவரத்தைக் கடுமையாகப் பாதித்துள்ளன.

வடபிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல்களுக்கு அரசாங்கமும் ராணுவமும் மக்களைப் பழிவாங்குவதற்கு இன்றைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வருகிறது. ஒரு புறம் பசி பட்டினி அவலம் தொடர மறுபுறம் படுகொலைகள் ஆட்கடத்தல்கள் இடம் பெற்று வருகின்றன. மக்களைப் பற்றி யாருக்குமே அக்கறை கிடையாது என்ற நிலையே காணப்படுகிறது. அறிக்கைகள், பேட்டிகள், பரப்புரைகளில் கூறப்படுபன வற்றுக்கும் அன்றாட மக்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்களுக்கும் பெரு இடைவெளியே இருந்து வருகின்றது. அவரவர் தத்தமது ஆதாயங்களைப் பெறவும் மக்கள் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்ற நிலையிலேயே சம்மந்தப்பட்ட சகல தரப்பினரும் நடந்து கொள்கின்றனர்.

வடபுலத்தில் கள்ளச் சந்தையில் மிக மோசமான விலைக்கு பொருட்களைப் பதுக்கி விற்பவர்கள் தமிழர்கள் தான். மக்களிடம் கறக்க வேண்டியவற்றை கறந்து கொள்ளும் இக் கள்ளச் சந்தைக்காரர்கள் தான் தமிழ் உணர்வு தமிழ் மக்களின் ஐக்கியம் போராட்டம் பற்றி உரத்துக் கூறுபவர்கள். இவ்வாறு ஏரியும் வீட்டில் விறகு பொறுக்கும் இவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் அடித்துக் கட்டமுடியாத கொள்ளை லாபத்தை தேடிக் கொள்ள நிற்கிறார்கள். அரசாங்கம் ஒரு புறத்தால் தமிழ் மக்களை வாட்டிவதைக்க மறுபுறத்தால் தமிழர்களையே தமிழர்கள் கொள்ளயிடும் அவல நிலைதான் துயரமான தாகும்.

இந்நிலையில் வடபகுதியின் பட்டினி நிலையைத் தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கையாக ஏ9 பாதை திறக்கப்படுவதே ஒரே வழியாகும்.

## தோட்டங்களில் அடிப்படை வைத்திய வசதிகள் உறுதிசெய்யப்பட வேண்டும்

ச. பன்னீர்செல்வம்

தோட்டப்புற சுகாதார சேவைகள் மிகவும் மோசமாக இருக்கிறது. தோட்டப்புறங்களில் வசதியான மருந்தகங்கள், மகப்பேற்றுமனைகள், வைத்தியசாலைகள் இல்லா தடியால் அதிகமான நோயாளிகளிகளுக்கு உரியநேரத்தில் சிகிச்சை அளிக்கப்படாமையால் மரணமடைந்துவருகின்றனர். இதனை மாற்றும் வகையில் தோட்டப்புற சுகாதார சேவை தேசிய சுகாதார சேவையுடன் இணைக்கப்பட வேண்டும். பின்தங்கியுள்ள தோட்டப்புற சுகாதார சேவையை முன்னேற்றுவதற்கான விஷேட ஏற்பாடுகளை செய்ய விஷேட நிர்வாகத்தின் கீழ் தோட்ட சுகாதார சேவை இயக்கப்பட வேண்டும்.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் மலையக பிரதேச செயலாளரும் வலப்பனை பிரதேசசபை உறுப்பினருமான ச. பன்னீர்ச்செல்வம் வலப்பனை பிரதேச சபையில் கடந்த மாதம் 25ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

குழந்தைகள், தாய்மார், சிறுவர்கள் ஆகியோரின், சுகாதாரத்திலிருந்தே ஒரு சமூகத்தின் சுகாதாரத்திற்கான அத்திவாரம் சரியான முறையில் இடப்பட வேண்டும். கர்ப்பிணி தாய்மார்கள், குழந்தைகள் போன்றோரை பராமரிப்பு முதல் எல்லா நடவடிக்கைகளும் கவனிப்பாரற்று விடப்பட்டுள்ளன. இதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

சுத்தமான நீர் கிடைப்பதையும் மலசல கூட வசதிகளையும் உறுதி செய்து சுத்தமான சூழலை உறுதி செய்ய வேண்டும். அதற்கான சுகாதர பரிசோதகர்கள் நியமிக்கப்பட வேண்டும். இவற்றை வலியுறுத்திய பன்னீர் பின்வரும் கோரிக்கைகளையும் முன்வைத்தார்.

*தோட்டப்புறங்களில் நிறையுணவு, சுத்தமான நீர், சுகாதாரமான சூழல் போன்றவற்றை உறுதிசெய்ய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

*தோட்ட மருந்தகங்கள், மகப்பேற்றுமனைகள், வைத்தியசாலைகள் சீரமைக்கப்பட்டு இயக்கப்பட வேண்டும். தோட்டப்புற மக்களுக்கு முதலுதவிச் சிகிச்சை அளிப்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

* தோட்டப்புற இளைஞர்கள், யுவதிகள், தோட்ட உதவி மருந்துவர்களாக, தாதிகளாக வைத்தியசாலை உதவியாளர்கள் மகப்பேற்று உதவியாளர்களாக பயிற்றுவிக்கப்பட்டு தோட்டப் பகுதிகளுக்கு நியமிக்கப்பட வேண்டும்.

*தோட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு வைத்திய வலயங்களாக அமைக்கப்பட்டு அவை ஒவ்வொன்றிலும் மாவட்ட வைத்தியசாலைகளுக்கு இணையான வைத்தியசாலைகள் அமைக்கப்பட வேண்டும். அங்கு வைத்திய நிபுணர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள் நியமிக்கப்பட்டு எல்லா விதமான சிகிச்சைகளும் அளிக்கப்பட வேண்டும்.

* எல்லா தோட்டங்களிலும் அம்புலன்ஸ் வசதிகள் இருக்க வேண்டும்.

* நகரப்புறங்களிலுள்ள வைத்தியசாலைகள் தரம் உயர்த்தப்பட்டு அங்கு தமிழ் தெரிந்தவர்கள் சேவைக்கு அமர்த்தப்பட வேண்டும்.

மேற்படி கோரிக்கைகளை பிரதேச சபைக் கூட்டத்தில் தோழர் பன்னீர் செல்வம் முன்வைத்துள்ள போதும் அவற்றை பிரதேச சபை நிர்வாகம் ஏற்று நடைமுறைப்படுத்தும் என நம்பி சும்மா இருந்து விட முடியாது. அவற்றை நடைமுறைப்படுத்தக் கோரி வெளியே தொழிலாளர்களையும் மக்களையும் அணி திரட்டி வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதற்கான பிரசாரங்களையும் அறிவூட்டல்களையும் மக்களிடையே செய்தல் வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஈழத் தமிழர்களை ஏமாற்றும் தமிழ் நாட்டின் காவடித் தரகர்கள்

தமிழ் மக்களின் பிரச்சனைகளை டில்லிக்கு விளக்குவதற்காகத் தமிழ் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் போனாலென்ன, தெரிவு செய்யப்படாத பிரதிநிதிகள் போனாலென்ன, தனியாகப் போனாலென்ன, தரகர்கள் மூலம் போனாலென்ன, அவர்கள் சொல்லித்தான் அறிய வேண்டியளவுக்கு இதுவரை நடந்தவற்றையெல்லாம் டில்லி அதிகாரபீடம் அறியாமலா இருக்கிறது? தங்களது தேவைகளை யாரை வைத்து எப்படி நிறைவேற்றுவது என்பது அங்கே உள்ளவர்கட்குத் தெரியும். அவர்களது சேவைக்கான தொண்டரடியார்களாக நடந்து கொள்ளாத எவருக்கும் அங்கே அண்ட இடமில்லை. டில்லிக்குக்காவடி எடுக்க வேண்டுமானால் தாங்கள் தான் தகுந்த தரகர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற கூட்டமொன்று சென்னையில் கூடாரம படித்து வாழுகிறது. அவர்களை அணுகாமல் ஏதாவது ஈழத் தமிழ்த் தலைவர்களது சந்திப்புச் சரிவந்தால் அதுபற்றிப் பேசமாட்டார்கள். சரிவராவிட்டால் தங்கள் சொற்பிரகாரம் சரிவர நடந்து கொள்ளாதால் தான் நடந்தது என்று நூறு விளக்கங்கள் தருவார்கள். இந்தத் தரகர்கள் இதுவரை செய்து வந்தது என்ன?

டில்லியின் தேவைகளுக்கமைய நடந்துகொள்ளுமாறு தமிழ் எம்.பிக்களையும் அவர்கள் மூலம் விடுதலைப் புலிகளையும் வற்புறுத்துகிற முகவர்கள் தாம் இவர்கள். இவர்களால் தமிழகத்திலோ டில்லியிலோ தமிழ்மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக எந்த விதமாக குறிப்பிடத்தக்க சிந்தனை மாற்றத்தையும் ஏற்படுத்த முடிந்ததற்கு ஆதாரமில்லை. கருணாநிதி வீட்டில் காப்பி குடித்தேன் கோபாலசாமியோடு கடற்கரைக்குப் போனேன் சோனியா காந்தியிடம் என் விசிட்டிங் கார்ட் இருக்கிறது. ஜெயலலிதாவுக்கும் என் பேர் தெரியும் என்கிற விதமாகத் தங்களது 'தகைமைகளை' விளம்பரம் செய்து கொள்வதை விட இவர்கள் எதையுமே உருப்படியாகச் செய்ததில்லை.

எல்லா இந்திய மேலாதிக்கக் கட்சிகளிடத்தும் இவர்களுக்குச் செல்வாக்கு இருக்கிற தென்று நம்பி ஏமாறுவதற்கு சில இளிச்சவாயர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காகவே ஈழத்து நாளேடுகளில் இவர்களுக்குப் பத்திகள் ஒதுக்கப்படுகின்றன. இதனை நமது தமிழ் நாளேடுகள் பக்கம் பக்கமாகப் போட்டு தமிழ் மக்களை மயங்கவும் ஏமாற்றவும் தம்பணி செய்கின்றன. மத்திய அரசும் பிரதமரும் பாதுகாப்பு, வெளிவிவகார அலுவல் அமைச்சர்களும் செயற்படும் விதமும் கொள்கைகளும் தீர்மானங்களும் எந்த இருட்டறைகளில் உருவாக்கப்படுகிறன என்ற உண்மை இந்தியாவின் உண்மையான உள்ளூர் எசமானர்கள் யாரென்றும் இந்தக் காவடித் தரகர்கட்கு நன்கு தெரியும். ஏனெனில் அவர்களது கூலிப் படைகளாகத்தான் இந்தக் கூட்டம் இருந்து வருகிறது.

தமிழ்த் தேசியவாத அரசியலில் வாய்ச் சவடாலுக்குக் குறைச்சல் இருந்ததில்லை. அதற்கேற்றாற் போலத் தான் இந்தக் காவடித் தரகர்களும் தருணம் வாய்க்கும் போது தங்கள் வாய் வல்லமையைக் காட்டிக் கொள்கிறார்கள்

## பௌச்சரின் பயங்கரவாதம்

அமெரிக்க அரச துணைச் செயலாளர் றிச்சட் பௌச்சரின் வருகைக்கு நிறைய ஊடக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பௌச்சர் விடுதலைப்புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கம் என்ற அமெரிக்க நிலைப்பாட்டை வற்புறுத்திப் பேசியிக்கிறார்கள். எனினும் தமிழ் ஊடகங்கள் பௌச்சரின் வருகையின் நோக்கங்களை இன்னும் சரிவர விளங்கிக்கொள்ளவில்லை. பௌச்சர் நேபாளத்தில் முடியாட்சிக்கு எதிராக ஏழு கட்சிக் கூட்டணியும் மாஓவாத விடுதலைப் போராளிகளும் ஒத்துழைப்பதற்குக் குழிபறிக்கவும் ராணுவத்தின் உதவியுடன் நேபாள சர்வாதிகார முடியாட்சிக்குப் புத்துயிரூட்டவும் கடுமையாக முயன்று வந்திருப்பவர் என்பது பற்றித் தமிழ் மக்கள் அறிய மாட்டார்கள். தமது ஊடகங்கள் அதைச் பேசுவதில்லை. நேபாள மாஓ வாதிகளின் எதிரி எவரும் உரிமைக்காகப் போராடுகிற எந்த மக்களதும் நண்பர் அல்ல என்ற உண்மை விளங்கினால் அல்லவா தமிழ் ஊடகங்கள் நேபாளம் பற்றிய உண்மைகளை மக்களுக்குச் சொல்ல முடியும். அவர்களது குறுகிய தேசியவாத முதலாளியச் சிந்தனை அதற்கெல்லாம் இடம் கொடுக்குமா?

## தொழிற்சங்க உரிமைகளை நிலைநாட்ட சர்வதேச சமூகத்திடம் முறைப்பாடு

உளநாட்டில் பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியாத அளவிற்கு இலங்கையின் எல்லாப் பிரச்சினைகளுமே சர்வதேசமயமாக்கப்பட்டுள்ளன. யூலை மாதம் 25 ஆம் திகதி உயர் நீதிமன்றம் தொழிற்சங்க நடடிவக்கைகளை கட்டுப்படுத்தும் விதத்தில் தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது. இது சர்வதேச தொழில் சாசன ஏற்பாடுகளுக்கு முரணாகும். இந்தசாசன ஏற்பாடுகளை ஏற்றுகொ ண்டு இலங்கை அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்துறை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சர்வதேச தொழில் அமைப்பிற்கு (I. L. O) முறைப்பாட்டை செய்துள்ளது. இலங்கை அரசாங்கம் தொழிற்சங்க உரிமைகளை மீறும் வகையில் நடந்து கொள்வதாகவும் அது பற்றி விசாரிக்கும்படி அம்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அம்முறைப்பாட்டை சர்வதேச தொழில் அமைப்பு விசாரணை செய்வதற்காக ஏற்றுக்கொண்டுள்ளது.

உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பிற்கு மாறாக செயற்பட்டால் அது நீதிமன்றத்தை அவமதித்த குற்றமாகும் என்பதனால் தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுப்பதற்கான உரிமைகளை உறுதிசெய்து கொள்ளும் முயற்சிகளில் இறங்கத் தயங்குவதாகவே தெரிகிறது.

அதனால் அவையும் சர்வதேச நிறுவனங்களின் நிவாரணத்தை நாடியுள்ளன. சர்வதேச நிறுவனங்களின் நிவாரணங்களின் தலையீடுகள், நிவாரணங்கள் என்பன வரையறுக்கப்பட்டவை ஆகும்.

தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் இதுவரையும் அனுபவித்து வரும் உரிமைகளை இரத்துச் செய்யும் வகையில் அரசாங்கத்தினதும் நடவடிக்கைகளும் நீதிமன்றத்தீர்ப்புகளும் அமையும் போது தொழிலாளர் வர்க்கம் மௌனமாக இருக்க முடியாது. அதனது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். அந்த நடவடிக்கைகளை அது தீர்மானிக்க வேண்டும்.

தொழிற்சங்களின் வேலை நிறுத்த உரிமைகளுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் வேலைநிறுத்தங்களுக்கு எதிரான இடைக்கால தடையுத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. இது ஆரோக்கியமான விடயமல்ல.

அத்துடன் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை அரசாங்கமும் கையெழுத்திட்டுள்ள சமூக அரசியல் பொருளாதார உடன்படிக்கைளை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் ஒரு வழக்கில் தீர்ப்பளித்துள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சர்வதேச ரீதியான உடன்படிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட பாதுகாப்புகளை இலங்கை மக்கள் தேடிக் கொள்ள முடியும் என்று கூறுவதற்கிலலை.

சர்வதேச சமூகம் நிறுவனங்கள் போன்றன ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு மாறாக செயற்படப்போவதில்லை. அவ்வாறு இருக்கும் போது சர்வதேச சமூகம் எப்படி இலங்கை தொழிலாளி வர்க்கத்தை இரட்சிக்க முடியும்.

## ரணில் என்ன கூறப்போகிறார்

ஏ 9 பாதையை அரசாங்கம் திறந்து விடப் போவது இல்லை என்ற முடிவை ஜெனிவாப் பேச்சுவார்த்தையில் தெளிவாகவும் திடமாகவும் கூறி விட்டது. அதுவே பேச்சுவார்த்தை முறிவுக்கும் காரணமாகிக் கொண்டது. ஆனால் ஏ 9 பாதையைத் திறந்தது தானே எனப் பெருமை பேசி வந்த ரணில் விக்கிரமசிங்கா இப்போது அது பற்றி எதுவும் கூறாது மௌனம் சாதித்து வருகிறார். ஜெனிவாப் பேச்சுவார்த்தை முறிவடைந்தமை பற்றிக் கருத்துக் கூறும் போது ஏ 9 பாதை பற்றிய கதையை அவர் தவிர்த்துக் கொண்டார். அதற்கு காரணம் இருக்கவே செய்கிறது.

ஜனாதிபதிக்கும் ரணிலுக்குமிடையில் இருகட்சிப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதலால் அரசாங்கமும் ஜனாதிபதியும் எடுக்கும் முடிவுகளை புரிந்துணர்வுடன் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். எனவே அடக்கி வாசிப்பதும் முக்கிய விடயங்களில் நழுவிக் கொள்வதும் அவருக்குத் தேவையானதாகும்.

அதுமட்டுமன்றி வடக்கு கிழக்கு மக்களையும் விடுதலைப்புலிகளையும் பழிவாங்க உள்ளூரச் சந்தர்ப்பம் பார்த்திருந்த ரணிலுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இது நல்லதொரு சந்தர்ப்பமாகவும் அமைந்து கொண்டுளது. அடிப்படையில் பேரினவாத ஆளும் வர்க்க நிலைப்பாடு கொண்ட ரணில் மீது பாசமும் பக்தியும் காட்டி வந்த தமிழர் தரப்பினர் இப்போது என்ன கூறப்போகிறார்கள். ரணில்- மகிந்தா புரிந்துணர்வு தமிழ் மக்கள் விரோத நிலைபாட்டிற்கு வலுச் சேர்க்கும் ஒன்றேயாகும். அத்துடன் உலக வங்கி சர்வதேச நாணய நிதியத்திற்கும் அமெரிக்கா உள்ளிட்ட அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு நாட்டைத் தாரை வார்க்கும் கூட்டு செயல்பாடும் புரிந்துணர்வும் என்பதைத் தமிழ் மக்கள் இப்போதாவது புரிந்து கொண்டால் போதுமானதாகும்.

## எப்போது பேசுவது

தீர்வுக்கான ஆலோசனை எதுவும் இல்லாமல் விடுதலைப்புலிகளுடன் பேசிப் பயனில்லை என்று ஆனந்தசங்கரி சொல்லியிருக்கிறார். தேசிய இன ப்பிரச்சனை பற்றிய விடயத்தில் இது எல்லாருக்கும் எப்போதே தெரிந்த விடயம். எனினும் இன்று அவசியம் பேச வேண்டிய விடயங்கள் உள்ளன. போர் நிறுத்தத்தை எப்படிச் சரிவர நடைமுறைப்படுத்துவது என்பதும் போரால் பாதிக்கப்பட்ட மக்களை எப்படி இயல்பு வாழ்க்கைக்கு மீட்பது என்பதும் தீர்வு வரும் வரை காத்திருக்க வேண்டிய விடயங்களல்ல.

பேரினவாதக்கட்சி எதுவுமே இவ்விடயங்கள் பற்றிய அக்கறையுடையவையல்ல என்ற உண்மை ஆனந்தசங்கரிக்கம் விளங்க வேண்டும். தீர்வுக்கான ஆலோசனை ஒன்றை அரசாங்கம் உருவாக்கும் வரை பேசுவதிற் பயனில்லை என்றால், என்றைக்குமே பேச இயலாது என்பது தான் உண்மை. அதுதான் ஐயா ஆனந்தசங்கரியின் நோக்கமா?

## தலைவர்கள்

தங்கத்தில் குழாய் செய்து
திணித்து திணித்துப் பார்த்தேன்.
நாய் வால் நிமிர்வதாய் இல்லை.
அது போலவே இவர்களும்.
சந்தா கொடுத்து- சங்கம் வைத்து
உழைத்து- ஓட்டுப் போட்டு
குனிந்து குட்டையாகி
கூன் விழுந்த எம்மவர்களும்
ஏமாந்ததே மிச்சம்.
துஸ்டனை மேலே ஏற்றுவதும்
ஆமை ஓட்டு வாழ்க்கை வாழ்வதும்
உரிமை பற்றி சிந்திக்காது
வளர்ச்சி பற்றி யோசிக்காது
வாந்தி எடுத்ததில்
சிந்தனை வரண்டு விட்டது.
சிந்தனை முகவரி தொலைத்து
காணமல் போக
தங்கத்தில் குழாய் செய்து
திணித்து திணித்து பார்த்தோம்.
நாய் வால் நிமிர்வதாய் இல்லை!
ஆனால்
நாய்க்ள் மட்டும்
என்றென்றும் சிம்மாசனங்களை
நாறடித்த வண்ணம்!

*எல். கிங்ஸ்லி கோமஸ்*

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# தோட்டப்புற வீடமைப்புத் திட்டங்கள் மூடு மந்திரமாக வைக்கப்பட்டதேன்?

தோட்டப்பகுதிகளில் ஒரு லட்சத்து அறுபதினாயிரம் தனித்தனி வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஐ. நா அபிவிருத்தி தாபனமும் உதவியளிக்க விருப்பதாக பெ. முத்துலிங்கம் என்பவர் ஒக்டோபர் 14ஆம் திகதி வீரகேசரி வாரமலரில் கட்டுரையொன்றை எழுதியுள்ளார். அதன் படி கணவனுக்கும் மனைவிக்கும் 10 பேர்ச் தோட்டக்காணி கொடுக்கப்பட்டு அதில் வீடு கட்டுவதற்கு கடனுதவி செய்து கொடுக்கப்படும் அதற்கு உடனடியாக காணிக்கான சொத்தரிமை உறுதி வழங்கப்படாவிட்டாலும் 99 ஆண்டுகளுக்கான குத்தகை ஒப்பந்த அடிப்படையில் அக்காணிகள் வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

காலம் பிந்தியாவது இத்தகவலை வெளிப்படுத்திய முத்துலிங்கத்திற்கு நன்றி. தோட்டஉட்கட்டமைப்பு அமைச்சரோ அவ்வமைச்சிலே வேலை செய்து வரும். மலையகத்தமிழ் அதிகாரிகளோ மலையகத் தமிழ் மக்களுக்கு இத்தகவலை வெளிப்படுத்தாமைக்கு காரணம் என்ன?

பரம்பரை பரம்பரையாக வீட்டுரிமையையே இல்லாத தோட்டத்தொழிலாளிகளுக்கு வீடுகட்ட காணியும், வீடுகட்ட உதவியும் வழங்கப்படவிருக்கிறது என்பது நல்ல செய்தியே. இச் செய்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சாலோ அதன் அதிகாரிகளாலோ வெளிப்படுத்தப்படவில்லை.

பெ. முத்துலிங்கம் அவரது கட்டுரையில் வெளிப்படுத்திய பிறகு தோட்டஉட்கட்டமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் சி. நவரட்ண பெருந்தோட்ட வீட்டுத்திட்டம் தற்போதைய அமைச்சரின் காலத்திலன்றி முத்துசிவலிங்கம் அமைச்சராக இருந்த காலத்திலேயே அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக வீரகேசரிக்கு பதில் எழுதியுள்ளார். அவரது பதில் ஒக்டோபர் 22 ஆம் திகதி வீரகேசரி வாரமலரில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அன்றைய வார மலரிலேயே நவரட்ணவின் கடிதத்திற்கு வீரகேசரியின் பிரதம ஆசிரியரின் பதில் கடிதம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதில் சி. பி. ரட்ணாயக்க அமைச்சராக இருந்த போதே பெருந்தோட்ட வீட்டுத் திட்டத்திற்கு அங்கீகாரம் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய பிரச்சினை எந்த அமைச்சரின் காலத்தில் எந்த அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்டது என்பதல்ல. ஏனெனில் இது தனிப்பட்ட நன்கொடையல்ல. நீண்டகால அடக்கு முறைக்கு உட்பட்ட ஒரு தேசிய இனத்திற்காக மேற்கொள்ளப்படும் அரசாங்கத் திட்டமாகும்.

அத்திட்டத்தின் அடிப்படையில் தோட்டத்தொழிலாளர்கள் எவ்வாறு வீடுகளை கட்டிக் கொள்ள முடியும் என்பதுதான் முக்கிய பிரச்சினை ஆகும். அதற்காக தோட்டத் தொழிலாளர்கள் செய்ய வேண்டியதென்ன என்பது பற்றிய தகவல்கள் அவர்களுக்கு சென்றடைய வேண்டும். அந்தளவிற்கு அவர்களுக்கு அறிவூட்ட வேண்டும்.

அதனை செய்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை வெளிப்படுத்தாமல் மூடுமந்திரமாக வைத்திருந்தால் குறிப்பிட்ட காலத்தில் அத்திட்டம் நிறைவேற்றப்படாமல் இரத்து செய்யப்படலாம். அதேட்போன்று தனிப்பட்ட அமைச்சரின் சாதனையாக காட்டப்பட்டு வாக்கு வங்கிக்கு வேட்டை நடத்தப்படலாம்.

இலங்கையை உருவாக்குவதில் பாரிய பங்களிப்பை செய்துள்ள தற்போதும் தேசிய வருமானத்தில் பெரும்பகுதியை வழங்கிக் கொண்டிருக்கும் எப்போதும் பாவப்பட்ட பிறவிகளுக்கானதாகவே கொள்ளப்படுகிறது.

தோட்டப்புறக்கல்வி, சுகாதாரம், வீடமைப்பு போன்றன வரவு செலவுத்திட்டதினூடாக முன்மொழியப்படுவதில்லை. மாறாக வெளிநாடுகளினதும் வெளிநாட்டு நிறுவனங்களினதும் நிதியுதவியிலேயே தோட் டப்புறக்கல்வி, சுகாதாரம் வீடமைப்பு என்பன மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய பிரஜைகளுக்கு இனாமாகவே வீட்டுவசதிகள் செய்து கொடுக்கப்படும் போது வெகு சிறியளவில் செய்து கொடுக்கப்படும் வீட்டு வசதியும் கடனடிப்படையிலேயே தோட்டத்தொழிலாளர்களுக்கு செய்து கொடுக்கப்படுகின்றன. இது இனவர்க்க பார பட்சம் இல்லையா?

வெளிநாடுகளினதும் வெளிநாட்டு நிறுவனங்களினதும் நிதியுதவிகள் இல்லாவிட்டால் தோட்டப்புறங்களில் எவ்வித அபிவிருத்தியுமில்லை என்ற நிலையே இருக்கிறது. அரசாங்க வரவு செலவுத் திட்ட நிதியில் தோட்டப்புற அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுவதில்லை. ஆனால் தேடத் தொழிலாளிகள் சொகுசாக வாழ்வதாக கிராமப்புற சிங்கள விவசாயிகள் மத்தியில் பிரசாரம் செய்யப்படுகிறது.

இந்நிலையில் அங்கீகரிக்கப்பட்ட சில அபிவிருத்தி திட்டங்களும் தோட்டப்புற மக்களை சென்றடைய அத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் விலாவாரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

தோட்ட உள்கட்டமைப்பு அமைச்சர், பிரதியமைச்சர் அதிகாரிகள் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். சம்பளங்களை சுளை சுளையாகப் பொறுவதுடன் சொகுசு வாழ்வையும் அனுபவித்து வரும் மலையக அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் பா. உக்கள் மற்றும் பெரிய அதிகாரிகள் மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் பற்றி நெஞ்சுக்கு நேர்மையாக இருப்பார்களா? இதுவரை நம்பினால் அது வெறும் ஏமாற்ற மேயாகும்.

## தீபாவளி தினத்தில் குற்றச்செயல்கள்

தோட்டப்புற பொலிஸ் நிலையங்களில் கொலைகள், கைகலப்புகள், குத்துவெட்டுகள் அதிகமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. தீபாவளி பண்டிகை காலத்தை அடுத்தே அக்குற்றச்செயல்கள் அதிகம் இடம்பெற்றுள்ளது. கடந்த 25 வருட காலத்தில் தோட்டப்புறங்களில் தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் அதிமான குற்றச் செயல்கள் இவ்வருட தீபாவளியை அடுத்தே ஏற்பட்டுள்ளன.

பண்டிகைக் காலங்களில் கிராமப்புறங்களிலேயே அதிகமான குற்றச்செயல்கள் இடம்பெறுவதுண்டு. தோட்டங்களில் இவ்வருடம் மேலும் குற்றச்செயல்கள் அதிகரித்து காணப்படுவதற்கு பண்பாட்டு ரீதியாக தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சீரழிவுகளே அடிப்படை காரணமாக இருக்க முடியும். தோட்டங்களுக்கு வெளியில் சென்று தொழில்புரிபவர்கள், படித்தவர்கள், போன்றவர்களிடையேயும், அவர்களுக்கும் தோட்டத்தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தோட்டத்தொழிலாளர்கள் தவிர்ந்த ஏனைய வர்க்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும் சாதிய பிளவுகள் குறிப்பாக பணம்பண்ணுவதை மட்டுமே நோக்காக கொண்ட சமூகவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களின் செல்வாக்கு மற்றும் தொலைக்காட்சி நாடகங்கள் போன்ற சீரழிந்த பண்பாடுகளின் தாக்கம் தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் குரோத உணர்வுகளை தோற்றுவித்துள்ளன.இந்த நிலைமையில் மாற்றம் கொண்டுவர சமூக அக்கறையுடையோர் கூடிய பங்களிப்பை செய்ய வேண்டும்.

## மனு அனுப்பு

சொந்த நாட்டின்
அரசாங்கமே!
அன்னிய நாட்டின் அராஜகம்
உன்- கண்களுக்கு.......
எட்டவில்லயா?

வேலைதேடிப் போன பெண்கள்
வேசிப்பட்டம்..!
தாங்கிக் கொண்டு- வீடு
திரும்பும் துர்ப்பாக்கியம்
உன்- தொலைநோக்கில்
அடங்கியுள்ளதா?

வர்த்தகம் பேசிய வனாந்தரத்தில்
கள்ளிச் செடியாய்!
கழற்றி எறியப்படும்
கற்பின் அலட்சியம்- உன்
ஒளிப்பரப்பில் பார்க்கவில்லையோ?

எதிர்பார்ப்பில்லாமலே
பெண்கள் தலைகளில்
முள்முடி பூட்டும்- புதுச் செய்தி
உன் செவிகளை
துளையிட வில்லையோ?

பஞ்சத்தில் அடியுண்டே
பார்தாண்டிப் போனார்கள்
நெஞ்சத்தில் ஈரமின்றி
நொறுக்கி விட்டார்.
அவர்களின் ஏகாந்தத்தை!

விடிவைத் தேடி
விரைந்தவர்கள்......
தங்களையே தாரைவார்த்து!
தனிமரமாய் நிற்கின்றார்!

எங்கள் நெஞ்சங்கள்
நெருடல்களால் நிரம்பிவலிக்கிறது!
எங்கள் இதயங்கள்
இடிபாடுகளுக்குள்
சிக்குண்டு சிதைகிறது!

சொந்த நாட்டின்
அரசாங்கமே!
சீக்கிரம்- ஒரு
மனு அனுப்பு- இன்னும்
மீதமிருப்பவர்களும்
மரணப்படுக்கையில்
பனிவரும் பிணங்களாய்
நாட்டை அடையுமுன்னே!
அனைவரையும் அனுப்பிவிடு
என்று சொல்லி.......
அந்நிய நாட்டு அகதி முகாம்
அதிகாரிக்கும்........
அராஜகத்தின் கெடுபிடிகளுக்கு
ஆரவாரம் போடும்- எம்
நாட்டு ஏஜன்சிகளுக்கும்!

வேலைவாய்ப்பென்று
வரவழைத்து- வியாபாரம்
பேசும்- வக்கற்ற நாடுகளுக்கும்!
நல்ல சந்தர்ப்பம்
வாய்த்ததென்று வேளா
வேளைக்கு- தன்
காமப்பசிக்கு பெண்களை
இரையாக்கும்- இழிகுணம்
படைத்த.....
காட்டு மிராண்டிகளின்
சாம்ராஜியத்திற்கும்!

சொந்த நாட்டின்
அரசாங்கமே- உடன்
எச்சரிக்கை மனு அனுப்பு!

-சு-

# சிறுவர் உரிமைகளும் கடமைகளும்

வணக்கம்;

ஒக்டோபர் 1ம் திகதியை சிறுவர்க்குரிய தினமாக ஐ. நா. சபை அறிவித்துள்ளதை யாவரும் அறிவோம். அனேகமான இலங்கை உட்பட அனைத்து நாடுகளும் அத்தினத்தை நினைவு கூர்ந்தன. சிறுவர் தினம் சிறுவர்களின் உரிமைகளை நினைவு கூர்வதையும் அவை பாதுகாக்கப்படுவதையும் நோக்காகக் கொண்டது எனக் கூறப்படுகிறது.

இன்றய காலப்பகுதி ஏகாதிபத்தியம் தனது உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் ஒரு கொடூரமான காலமாகும். இப்படியொரு சூழலில் ஏகாதிபத்திய த்தின் கூட்டாளியான ஐ. நாவில் அனைத்து மக்கள் நலன் சார்ந்த விடயங்களும் எழுத்தில் தூங்கிக் கொண்டிருக்கின்றன.

ஏகாதிபத்தியம் தனது வர்க்க நலன்களுக்காகவும் ஆதிக்கத்திற்காகவும் உலகளவில் பரவலாக நடத்திக் கொண்டிருக்கும் திட்டமிட்ட யுத்தங்களால் உலகே சுடுகாடாய் மாறிக் கொண்டிருக்கிறது. எத்தனையோ லட்சக்கணக்கான சிறுவர்கள் இறந்துள்ளனர். ஏகாதிபத்திய முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எத்தனையோ சிறுவர்கள் கூலித்தொழிலாளர்களாய் உழன்று கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறாக தனியார்மயம் தாராளமயம் ஏகாபோகம் போன்றவைகளின் பொருளாதாரத் தேவைகளும் அதன் நலன்களும் சமூகத்தினது பாரிய பண்பாட்டு சீரழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. இதன் காரணமாக சிறு வர்கள் போதை, சினிமா, அந்நியக் கலாச்சார மோகம் போன்றவைகளாலும் பாலியல் துஷ் பிரயோகம், பலவந்தமாக விபச்சாரத்திற்குள் வீழ்த் துதல் போன்றவைகளாலும் அதிகமான சிறுவர்கள் சீரழிந்து போகிறார்கள்.

ஒரு புறம் சிறுவர் உரிமைப் பற்றி பேசும் போது மறுபுறம் சிறுவர் சம்பந்தமான மேற்குறிப்பிட்ட உலக அனுபவங்களையும் கருத்திற் கொள்ள வேண்டும். இவை போன்ற குரூரத்தனங்கள் உலகின் அடித்தட்டு மக்களையும், உழைக்கும் வர்க்கங்களைச் சார்ந்த சிறுவர்களையே பலிகொள்கிறது. எனினும் மத்தியதர வர்க்கத்துச் சிறுவர்கள் நுகர்வுக்கலாச் சாரம் தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் சொகுசு போன்றவைகளால் பாதிப்புறுகிறார்கள்.

இன்றைய இலங்கையில் அடக்கப்படும் தேசிய இனங்களின் சிறுவர்களில் ஒரு பகுதியினர் யுத்தத்தினால் இறந்தும், சிலர் அகதிகளாயும், அநாதைகளாகியும் போய்விட்டனர். அண்மைய யுத்த நடவடிக்கையின் போது ஏற்பட்ட செஞ்சோலை படுகொலையும், மூதூரின் பகுதியின் இடப்பெயர்வும் சிறுவர்களின் பரிதாப நிலைக்கு நல்ல உதாரணங்களாகும். மலையக தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் பொருளாதார சீர்கேடுகளால் முறையான கல்வி, போசாக்கு உணவு, சுகாதாரம், சிறந்த வொரு வாழ்க்கைச் சூழல் போன்றவை இல்லாமல் பெரும் அவதியுறுகின்றனர்.

வறுமை நிலை காரணமாக இவர்கள் நகர்ப்புறங்களை நோக்கி தள்ளப்படுகின்றனர். இங்கு வீடுகளிலும் கடைகளிலும் வேலைக்காக அமர்த்தப்படுகின்றனர். இதற்காக சொற்ப வேதனம் பெறுகின்றனர். அத்துடன் இவர்கள் பல்வேறு விதமான அடக்கு முறைகளுக்கும் ஆளாகின்றனர். சிலரின் கொடூரத்தனங்களால் சிலர் இறந்தும் போவதுண்டு. அண்மைய வெலிஓயா தோட்டத்தின் சிறுவனின் மரணம் சிறந்த உதாரணம் ஆகும். இம்மாதிரியான பாதிப்புகளால் எதிர்காலக் கல்வி பாழாகி கல்வியூட்டப்படாத சமூகம் ஒன்று வளர்வதற்கும் ஏதுவாகிறது. உலகின் பல நாடுகளில் இவ்வாறான நிலையே காணப்படுகிறது. இந்த இக்கட்டான சூழலில் சிறுவர்களின் முக்கியத்துவம், அவர்களின் உரிமைகள் சமூக மாற்றத்தில் அவர்களின் வகிபங்கு என்பன பற்றி சிந்திப்பது பொருந்தும்.

நாளைய உலகிற்கு தலைமை தாங்கி சிறப்பானதொரு உலகைக் கட்டியமைக்க சிறந்ததொரு சிறுவர் சமூகத்தைக் கட்டி வளர்ப்பது அவசியமாகும். சிறுவர் சமூகம் ஆரோக்கியமானதாக வளர்க்கப்படும் சந்தர்ப்பம் முதலாளித்துவ சமூக அமைப்பில் சாத்தியம் இல்லை. ஆனால் அது சோஸலிசத்தின் கீழேயே சாத்தியமாக்கப்பட முடியும். இதற்கு சோஷலிச நாடுளின் அனுபவங்கள் முன்னு தாரணமாக கொண்டவைகளாகும்.

வெறுமனே சர்வதேச தினம் கொண்டாடுவதால் மட்டும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க முடியாது. அவர்களது உரிமைகள் நலன்கள் பேணப்படுவதற்கு முறையான திட்டங்கள் அவசியம். அவற்றை முதலாளித்துவ ஆட்சியினர் செயற்படுத்துவார்களா என்பதே கேள்வியாகும்.

அன்புடன் கிட்டு

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
Puthiya Poomi
சுற்று13 நவம்பர் 2006 பக்கம்12 விலை 15/– சுழற்சி 97

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே:011-2435117,தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

## சட்டத்தரணிகளே கவனம்!

சட்டத்தரணி எல்மோ மார்ஷ் பெரோ (73 வயது) உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு கீழ்ப்பணியாமல் மரியாதையற்ற வகையில் நடந்து கொண்டார் என்று உயர் நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். அதனால் அவர் சட்டத்தரணி தொழிலிருந்து நீக்கப்படலாமா என்பதற்கான விசாரணை உயர்நீதிமன்றத்தில் நடை பெறவிருக்கிறது. எல்மோ முன்னாள் நில அளவையாளர் நாயகம் என்பதுடன் அவர் பொதுநலன் சம்பந்தப்பட்ட பல வழக்குகளில் ஆஜராகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் அவர்களது பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளனர். அவர்கள் மனச்சாட்சிக்கு எதிராக நடந்து கொள்ள முடியாத நிலையிலேயே இராஜினமா செய்ததாக கூறியிருப்பினும் அவர்களின் இராஜினமாவிற்கான காரணங்களை அறிய விசாரணைகள் நடத்தப்படவில்லை. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக பதில் கடமையாற்றி வரும் இரண்டு நீதியரசர்கள் அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின்படி நியமிக்கப்படவில்லை. இதனால் சட்டத்தரணி என்ற ரீதியில் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றை சட்டத்தரணி எல்மோ மார்ச் 9ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார். மார்ச் 21 ஆம் திகதி அவர் உயர் நீதிமன்றத்தில் வாய்மூல சமர்ப்பணங்கசை செய்தார்.

அப்போது அவ் வழக்கை விசாரித்த மூன்று நீதியரசர்களில் ஒருவர் அரசியலமைப்பிற்கு இணங்க நியமிக்கப்படாமல் நீதிசேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக இயங்கிவரும் இரு நீதியரசர்களில் ஒருவராக இருந்தமையால் அவ்விசாரணைக்கு எல்மோ ஆட்சேபனை தெரிவித்தார். அதாவது அவரது மனுவின் விடயத்துடன் சம்பந்தப்பட்ட ஒருவர் நீதியரசராக இருப்பது விசாரனையைப் பாதிக்கும் என்பதை எடுத்துக் காட்டினார். இந்த ஆட்சேபனையை விசாரணையை நடத்திய தலைமை நீதியரசர்கள் நிராகரித்தனர். ஆட்சேபனைக்குட்பட்டிருந்த நீதியரசர் விசாரிக்கும் நீதியரசர் குழுவில் இடம் பெற்றிருந்தாலும் அவர் விசாரணைக்கு பொறுப்பில்லை என்றும் தலைமை தாங்கும் நீதியரசரும் ஏனைய நீதியரசருமே விசாரணைக்கு பொறுப்பென்று கூறி அவ்ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது.

இந்த ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டவுடன் விசாரணைக்கு தலைமைதாங்கும் நீதியரசர் அம்மனுவை விசாரிக்க கூடாது என்ற ஆட்சேபனையை எல்மோ முன்வைத்தார். அதுவும் நிராகரிக்கப்பட்டது. அதற்கு பிறகு இன்னொரு ஆட்சேபனையை எல்மோ முன்வைத்தார். விசாரணை நடத்தி வந்த மூன்று நீதியரசர்களில் ஒருவர் அதற்கு பொறுப்பில்லை என்பதால் இவ்வாறான அரசியல் யாப்புடன் சம்பந்தப்பட்ட மனுவின் விசாரணைக்கு இரு நீதியரசர்கள் மட்டும் பொறுப்பாக இருந்து விசாரிக்க முடியாது என்ற ஆட்சேபனையை முன்வைத்தார். இவ்வாட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்டு மனுமீதான விசாரணை மார்ச் 31 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மார்ச் 21 ஆம் திகதி விசாரணையின் போது எல்மோ மரியாதையற்ற வகையில் சமர்ப்பணங்களை செய்ததாக அன்றைய விசாரணைகளுக்கு தலைமைதாங்கிய நீதியரசர் தெரிவித்ததாக இரண்டு பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருந்தன. மார்ச் 31 ஆம் திகதி மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எல்மோ அந்த செய்திகள் தொடர்பாக நீதிமன்றத்திடம் கருத்து கூறினார். அவ்வாறு மரியாதையற்றவகையில் நடந்து கொள்ளவில்லை என்று தெரிவித்தார். அவ்வேளை விசாரணைக்கு தலைமை தாங்கிய நீதியரசர் வழங்கு கோவையில் அவ்வாறு பதிவ செய்யப்பட்டுள்ளதாக கூறி செய்திப் பத்திரிகையில் வெளியானவற்றை உறுதிப்படுத்தினார். எல்மோ மரியாதையற்ற வகையில் நடந்து கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு உயர் நீதிமன்றத்தில் அவரது சட்டத்தரணி தொழில் உரிமைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக அறிந்து கொண்டார். ஆனால் அவருக்கு அது பற்றி அறிவித்தல் செய்யப்படாத நிலையிலும் ஒக்டோபர் 2 ஆம் திகதி அம்மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது உயர்நீதிமன்றத்தில் ஆஜாராகி தனக்கு அம்மனு பற்றி அறிவித்தல் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார். அப்போது அவ்விசாரணைக்கு தலைமைதாங்கிய பிரதம நீதியரசர் எல்மோவிடம் வழக்கு கோவையை பார்வை இடுவதற்காகக் கொடுத்தார்.

அக்கோவையின்படி அவர் மார்ச் 21 ஆம் திகதி அவரின் மனுவிசாரணைக்கு எடுக்கப்பட்டபோது (அ) நீதிமன்ற கேள்விகளுக்கு பதிலளிக்காமல் ‘மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை ஒன்றொன்றாக வாசித்துக்காட்டி நீதிமன்றத்தின் பெறுமதியான நேரத்தை வீனாக்கினார் என்றும் அவற்றை தொடர்ந்து வாசித்துக் காட்ட வேண்டாமென்று நீதிமன்றம் கேட்டுக்கொண்டபோதும் அதற்கு கீழ்ப்பணிய மறுத்து தொடர்ந்து வாசித்ததாகவும் (ஆ) விசாரணைக்குரிய முக்கிய விடயங்கள் பற்றிய விளக்கங்களை கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் கேட்டுக் கொண்டபோதும் அதற்கான விளங்கங்களை கொடுக்காமல் அவற்றை நீதியரசர்களே தேடிக்கொள்ள வேண்டுமென்று மரியாதையற்ற வகையில் தொகுப்புரை செய்ததாகவும் (இ) நீதிமன்றத்தை கேலி செய்யும் வகையிலும் அவமதிக்கும் வகையில் அத்துமீறிய மொழியை பிரயோகித்ததாகவும் சைகைகளை காட்டியதாகவும் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு அதற்காக அவர் சட்டத்தரணி தொழில் நிலையிலிருந்து நீதி நியாயாதிக்க சட்டத்தின் (2 ஆம் இலக்க 1978 ஆம் ஆண்டு சட்டம்) பிரிவு 42(2) இன் படி ஏன் விலக் கப்படக்கூடாது என்று கேட்கப்பட்டுள்ளது.

இப்பிரிவின்படி சட்டத்தரணி தொழில் புரியும் ஒருவர் மோசடி பிறழ்நடத்தை, குற்றம் அல்லது சட்டவிரோத செயலுகது குற்றவாளியாக காணப்பட்டால் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மூவரினால் சட்டத்தரணி தொழிலிருந்து நீக்கப்படலாம். அண்மையில் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி வழக்கு தொகுப்புரையை வழங்கும் போது பிரதமநீதியரசருடன் நீண்டநேரம் வாதத்திலீடுபட வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் சில வழக்குகளில் தொகுப்புரைகளை வழங்கிக் கொண்டிருக்கும் போது சில சட்டத்தரணிகள் நீதிமன்றங்களினால் எச்சரிக்கப்பட்டுள்ளனர். இதுபோன்ற சம்பவங்கள் அதிகம் நடைபெறுகின்றன. சட்டத்தர ணிகளுக்கு நீதித்துறை சம்பளம் வழங்காவிட்டாலும் அவர்கள் நீதித்துறை உத்தியோகத்தர்களாகக் கொள்ளப்படுவர். சட்டப்படி நீதியை நிலைநாட்ட சட்டத்தரணிகள் நீதித்துறைக்கு உதவி செய்பவர்களாகவே கொள்ளப்படுகின்றனர்.

சட்டத்தரணிகள் சட்டத்தரணி மொழியை பிரயோகிப்பதிலும், உணர்வை வெளிக்காட்டுவதிலும் தொகுப்புரையை வழங்குவதிலும் நிச்சயமாக வித்தியாசமானவர்களாகவே இருப்பர். நீதிமன்றங்கள் எதிர்பார்க்கும் விதத்திலேயே விசாரணைகளை செய்யவோ தொகுப்புரைகளை வழங்கவோ எல்லா சட்டத் தரணிகளாலும் முடியாது. நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகளுக்குமிடையேயான தொடர்பு நிலப் பிரபுத்துவ எஜமானுக்கும் வேலை ஆளுக்குமிடையேயான தொடர்பல்ல. சட்டத்தரணிகள் கண்மூடித் தனமாக நீதிபதிகளுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. நீதிமன்றத்துக்கும் சட்டத்தரணிகளுக்குமிடையில் பரஸ்பர மதிப்பு, மரியாதை, கௌரவம் போன்றன நீண்டகாலமாக உலக நாடுகளில் நிலைநாட்டப்பட்டு வருகிறது. சட்டத்தரணிகளில் அதிகமானோர் இந்த சமூக அமைப் புடன் ஒத்திணங்கியே அவர்களது தொழிலை செய்கின் றனர். பாதிக்கப்படும் மக்களுக்கு நீதித்துறையினூடாக நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதில் அதிகமான சட்டத் தரணிகள் பொறுப்புடனேயே நடந்து கொள்கின்றனர். இதில் சட்டத்தரணிகளுக்கும் நீதிபதிகளுக்குமிடையில் பகிடியான, காரசாரமான கருத்துக்கள் வழக்கு விசாரணையின் போது பரிமாறப்படுவதுண்டு. வாத விவாதங் கள் காரசாரங்கள் உணர்வுகள் இல்லாமல் யாந்திரிகமாக சட்டத்தரணியின் வாதங்கள் அமைய முடியாது. நீதிமன்றத்திற்குப் சட்டத்தரணிகளுக்குமிடையில் பரஸ்பர உறவின்றி பகை ஏற்படுவது நீதி நிலைநாட்டப்படுவ

தொர்ச்சி 9ம் பக்கம்

## சிறிலங்கா ஐ. தே. கட்சிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தம் யாருக்கு நன்மை?

அ. பூபதி

கடந்த 23- 10- 2006 அன்று ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக் கப்பட்டுள்ளது. ஆறு அம்சங்களை உள்ளடக்கியதான அவ் ஒப்பந்தம் வரலாற்று முக்கியத்துவம் கொண் டதெனவும் தென்னாசியாவில் முன்னுதாரணம் மிக்கதாக உள் ளது எனவும் வர்ணித்துப் புகழப்படு கிறது.

ஆனால் கூர்ந்து அவதானித்தால் அப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அரசியல் பொருளாதாரப் பின்னணி யானது நாட்டின் ஏகப் பெரும்பான் மையான உழைக்கும் மக்களு க்கோ அல்லது அடக்கி ஒடுக்கப்ப டும் தேசிய இனங்களுக்கோ அன் றி நாட்டின் அபிவிருத்திக்கோ பயன் தரத்தக்கதாக எதுவும் இல்லை என்பது புலனாகும்.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு? சமூக அபிவி ருத்தி தேர்தல் முறைமை மாற்றிய மைப்பு, கல்விக் கொள்கை சீரமை ப்பு ஆகியவற்றில் புரிந்துணர்வுடன் இருகட்சிகளும் சேர்ந்து செயல்படு



வது என்றே கூறப்பட்டுள்ளது. இத் தகைய புரிந்துணர்வு செயற்பாட் டுக்காக முன்வந்தமையானது ஏதோ வரலாற்றுப் பட்டறிவாலும் நாட்டு மக்கள் மீதான நேர்மை யான அக்கறையாலும் அல்ல. இருக ட்சிகளும் பிரதிநிதித்துவப்படுத்தி வந்த சொத்துசுகம் படைத்த ஆதிக் க வர்க்க சக்திகளுக்கு இப்போது இத்தகைய ஒரு ஐக்கியமும் புரிந்து ணர்வும் தேவைப்படுகிறது. அந்த வர்க்க சக்திகளின் நலன்கள் தேவைகள் எதிர்பார்ப்புகள் இவ் விரு கட்சிகளின் போட்டி அரசிய லால் பாதிக்கப்பட்டு வந்துள்ளன. எனவே தம்முள் இணங்கி புரிந்து ணர்வுடன் செயல்படுவதற்கு முன் வந்துள்ளன.

நாட்டை இன்றைய உலகமயமாத லின் கீழ் மறு கொலனியாக்கம் செய் வதற்கு இரு கட்சிகளுமே ஒரே இல க்கு நோக்கி நடந்து வந்துள்ளன. இதில் பச்சை நீல வேறுபாடு கிடை யாது. அவ்வாறே தேசிய இனங் களை ஒடுக்குவதிலும் இரு கட்சிக ளும் மாறி மாறி பேரினவாத நடை முறைகளைச் செயலாக்கி வந்துள் ளன. தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை விரிவுபடுத்தி வந்ததிலும் இரண்டு கட்சிகளும் ஒன்றுக்கு மற் றையது குறைந்தது அல்ல. முன்பு ஐக்கியத்தேசியக்கட்சி தரகு முதலா ளித்துவத்தையும் சிறிலங்கா சுதந் திரக் கட்சி தேசிய முதலாளித்து வத்தையும் பிரதிநிதித்துவம் செய்து நின்றன. ஆனால் இன்று அமெரி க்கா தலைமையிலான தாராளமய தனியார் மய உலகமயமாதலுக்கு இரண்டு கட்சிகளும் முழு ஆதர வைத் தெரிவித்து செயல்படுகின் றன. எனவே புரிந்துணர்வு உடன் பாடு வந்ததில் வியப்பேதும் இல்லை. அமெரிக்க ஐரோப்பிய யப்பானிய இந்திய பொருளாதார உடுருவல்க ளையும் அரசியல் சமூக கல்வி பண் பாட்டு நிர்ப்பந்தங்களையும் எவ்வித சிரமமும் இன்றி இருகட்சிகளுமே செம்கம்பளமிட்டு வரவேற்று வந்து ள்ளன. அதன் தொடர்ச்சியை முன் னெடுக்க ஏன் நமக்குள் போட்டி என்பதே புரிந்துணர்வு ஒப்பந்தம் வெளிப்படுத்தும் யதார்த்தமாகும். அதனாலேயே இப் புரிந்துணர்வு ஒப் பந்தத்தை அமெரிக்க ஐரோப்பிய இந்திய யப்பானிய ஆட்சியாளர்கள் மகிழ்சியுடன் வரவேற்றுள்ளனர். மேலும் இவ் ஒப்பந்தம் மூலம் இர ண்டு கட்சிகளுக்குள் ஏற்கனவே இடம் பெற்று வந்த உட்கட்சி குத்து வெட்டுகளும் அரசாங்கப் பக்கத் தாவல்களுக்கும் ஒரு இடைக்கால ஆப்பு வைக்கப்பட்டிருக்கிறது. அதே வேளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு அமைச்சர் பதவிகளும் வழங்கவும் இணங்கினால் பிரதமர் பதவி வழங் கவும் மகிந்தா தயாராக உள்ளார் அதனால் அமைச்சர்களின் எண் ணிக்கை நூற்றுக்கு மேல் உயரும். இதனால் ஏற்படும் நிதிச் சுமையா னது மேலும் மக்களின் தலைகளி லேயே ஏற்றப்படும் .அது பற்றி இவ் விரு கட்சிகளுக்கும் கவலை இல்லை.

அத்துடன் தேசிய இனப்பிரச்சினை க்கு ஒரு பெயரளவிலான ‘தீர்வு’ முன்வைக்கப்படலாம். ஆனால் அது தமிழ் மக்களால் ஏனைய தேசிய இனங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வாக அமையமாட்டாது. அவ்வாறே உழைக்கும் மக்கள் மேன் மேலும் ஒடுக்கப்படுபவர். பண க்காரர் மேலும் பணக்காரர் ஆவார் கள். ஏழைகள் மேன் மேலும் ஏழைக ளாவர். கல்வி சுகாதாரம் தனியார் மயம் பெறும். சமூகப் பண்பாட்டு நிலைமை மேலும் மோசமடையும். மேற்படி புரிந்துணர்வு ஆண்டபரம்ப ரையில் வந்த ஆளும் வர்க்கங்களி டையேயான புரிந்துண ர்வே அன்றி இதனால் எந்தவொரு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினையும் தீர்வ பெறமாட்டாது.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# தமிழர் வரலாற்றில் 1966 ஒக்ரோபர் 21 எழுச்சி ஏற்படுத்திய திருப்பு முனை 40வது ஆண்டு நினைவாக

- வெகுஜனன் -

1966 ஒக்ரோபர 21 எழுச்சி இலங்கைத் தமிழர்களின் சாதிய வரலாற்றில் மிகப் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்திய ஒரு புரட்சிகர எழுச்சியாகும். சாதியத்தையும்- தீண்டாமையையும் எதிர்த்து எழுந்த அவ் எழுச்சியும் அதன் பாதையில் முன்னெடுக்கப்பட்ட வெகுஜனப் போராட்டங்களும் ஆண்டாண்டு காமாக தாழ்த்தப்பட்ட மக்களைப் பிணைத்திருந்த அடிமை விலங்குகளை உடைத்தெறிந்தது. ஜனநாயக மனித உரிமைகளை வென்றெடுத்து சமத்துவத்தையும் சமூக அந்தஸ்தையும் நிலை நாட்டியது.

இவ் ஒக்ரோபர் 21எழுச்சி இடம் பெற்று நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. அதனால் இன்றைய இளம் தலைமு றையினருக்கு அன்றைய போராட்டங்களின் முக்கியத்துவமோ அவற்றுக்கான அடிப்படைக் காரணமாக அமைந்திருந்த சாதிய- தீண்டாமைக் கொடுமைகள் பற்றியோ அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் இன்றும் கூட சாதியக் கருத்தியல் சிந்தனை நடைமுறைகள் வெவ்வேறு வடிவங்களிலும் தளங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்கும் போது அவற்றின் அன் றைய தீவிரத்தையும் சமூகத் தாக்கத்தையும் உணர்ந்து கொள்ள முடியும்.

கடந்த நூற்றாண்டின் முற் கூற்றிலிருந்து வடபுலத்திலே சாதியத்திற்கு எதிரான உணர்வுகள் வெளி வெளியான குரல்களாகி வளர ஆரம்பித்தன. ஐம்பதுகள் வரை அவற் றின் வளர்ச்சிகள் கோரிக்கைகளாக மனுக்களாக இரந்துரைகளாகவே இருந்து வந்தன. ஆனால் ஐம்பதுகளுக் குப்பின் ஓரளவிற்கு அழுத்தக் குரல்களாகி எல்லைகளு க்கு உட்பட்ட சாத்வீகப் போராட்ட வடிவங்களையும் பெற்றது. அவையும் பாராளுமன்ற எதிர் பார்ப்புகளாகவும் சீர்திருத்தக் கோரிக்கைகளாகவும் இருந்து வந்தன. சைவ கிறிஸ்தவ வேளாள ஆதிக்க சக்திகளிடம் அவர்களது அரசியல் பிரதிநிதிகளிடம் மன்றாடிக் கேட்கும் நிலையே காண ப்பட்டது. அப் பாராளுமன்றத் தலைமைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரங்கிப் போட வேண்டிய பிச்சை போன்ற எதிர்பார்க்கப்பட்டது. அரசாங்கத்திற்கு மனுக்கள் அனுப்பி அற்ப சொற்ப சலுகைகளுக்காகக் காத்து நிற்கும் நிலையே நீடித்து வந்தது. சாதி அடிப்படை யிலான அமைப்புகளும் குறிப்பிட்ட எல்லைகளுக்கு அப் பால் போராட்டப் பாதையில் செல்ல முடியாத நிலைக் குள்ளேயே சூழன்று வந்தன. சாத்வீகமான சமாதான வழிகளுக்கு அப்பால் எதுவமே முன்னெடுக்கப்படவி ல்லை. பாராளுமன்றப் பதவி அன்றைய செனட்டர் பதவி போன்ற சில பதவிகள் பட்டங்கள் தாழ்த்தப்பட்டோர் மத்தியில் உள்ள ஓரிரு படித்தவர்களுக்குக் கிடைத்தால் உரிமைகளை வென்றெடுத்து விடலாம் என்ற போலியான எதிர்பார்ப்புகள் இருந்து வந்தன. இதனால் 1960 துகளின் நடுக்கூறு வரை தாழ்த்தப்பட்ட மக்களது சாதிய அடிமைத்தன வாழ்வில் பெரும் மாற்றங்கள் எதுவும் நிகழ வில்லை. சில சீர்திருத்தச் செயற்பாடுகள் இடம் பெற்ற அதேவேளை சாதிய முரண்பாடானது உள்ளார்ந்த வளர்ச்சி பெற்று வந்தது. அவ்வப்போது அதன் வெளிப் பாடுகள் வெவ் வேறு முனைகளில் அடையாளம் காட்டி நின்றன.

இச் சூழலிலேயே பழைய பொதுவுடைமைக் கட்சியிலிருந்து பிரிந்து பாராளுமன்றப் பாதையை நிராகரித்து புரட்சிகரப் பாதையில் செல்வதற்கு தீர்மானித்த தோழர் நா. சண்முகதாசன் தலையிலான பொதுவுடைமைக் கட்சி தோற்றம் பெற்றது. 1964ல் மாக்சிச லெனினிசப் பொதுவுடைக் கட்சியாகிக் கொண்ட வேளையில் புரட்சிகரப் போராட்டப் பாதையில் தொழிலாளர்கள் விவசாயிகள் இளம் தலைமுறையினர் அணிதிரண்டனர். தெற்கிலும் மலையகத்திலும் பெருமளவு புரட்சிகர சக்திகள் திரண்டமை போன்றே வடக்கு கிழக்கிலும் புரட்சிகர உணர் வுடன் வர்க்க ரீதியிலும் சாதி ரீதியிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் அணி திரண்டனர். அன்றைய தேசிய சர்வதேசிய நிலைமைகள் வர்க்கப் போராட்ட சக்திகளுக்கும் புரட்சிகர எழுச்சிகளுக்கும் சாதகமானவையாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்க தாகும்.

இலங்கைத் தமிழர்கள் மத்தியில் உருவாகிய தமிழ்த் தேசியத்தை சைவ- வேளாள மேட்டுக்குடி உயர் வர்க்க சக்தி கள் தமது பாராளுமன்றப் பதவிகளுக்கான பாதையில் முன்னெடுத்தன. அதேவேளை சாதிய முரண்பாடும் ஒடுக்குமுறையும் உள்ளூர கனன்று கொண்டிருந்தது. ஒரு சிறிய உரசல் ஏற்பட்டாலும் அதுவே தீப்பிளம்பாகக் கூடிய கொதி நிலையில் காணப்பட்டது.

இத்தகைய சாதிய சமூக முரண்பாட்டு அம்சத்தின் யதார்த்த நிலைமையை உரியவாறு அடையாளம் கண்டே புரட்சிகர பொதுவுடைமைக் கட்சி சாதியத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பது எனத் தீர்மானி த்தது. 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21ம் திகதி அன்று சாதிய- தீண்டாமையை எதிர்த்து சுன்னாகத்திலிருந்து ஒரு ஊர்வலத்தை ஆரம்பித்து யாழ் முற்ற வெளியில் பொதுக் கூட்டத்தை நடாத்தவும் முடிவு செய்தது.

இவ் எழுச்சியில் பங்கு கொள்ள ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுவுடைமைக் கட்சியின் சகல அணியினரும் அவர்களுடன் ஆதரவான மக்கள் இளைஞர்களும் குழுமினர். ஆனால் பொலீஸ் ஊர்வலத்திற்கு தடை விதித்திருந்தது. அதற்கு சாதிய ஆதிக்கம் கொண்டவர்களதும் பிற்போக்கு தமிழ் அரசியல் சக்திகளினதும் தூண்டுதல் இருந்தது.



அன்று சுன்னாகத்தில் இருந்து ஆரம்பித்த ஊர்வலம் பொலீஸ் தாக்குதலுக்கு உள்ளாவதற்கு முன்பாக யாழ் நகர் நோக்கி வீறுநடை போடுகிறது.

ஆனால் பொலீஸ் தடையையும் மீறி "சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்னும் செம்பதாகையின் கீழ் சாதிய- தீண்டாமைக்கு எதிரான புரட்சிகர முழக்கங்களை எழுப்பியவாறு ஊர்வலம் சுன்னாகம் சந்தை வளாகத்திலிருந்து புறப்பட்டு பிரதான வீதியில் அமைந்திருந்த பொலீஸ் நிலையத்தைக் கடந்து செல்ல அணிவகுத்துச் சென்றது. வீதியின் குறுக்கே பொலீஸ் படை தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிந்தது. ஊர்வலத்தின் முன்னணியில் தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம், டாக்டர் சு.வே. சீனிவாசகம் வீ.ஏ கந்தசாமி இ.கா. சூடாமணி கே. டானியல், டி.டி.பெரேரா எஸ்.ரி. என் .நாகரட்ணம் போன்றோர் தலைமை தாங்கிச் சென்றனர். ஊர்வலத்தின் மீது பொலீஸ் படை மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டது. தோழர்களின் தலைகள் தோள்களில் இருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தன. மேற்சட்டைகள் கிழக்கப்பட்ட நிலையில் கே.ஏ.சுப்பிரமணியம், வீ.ஏ. கந்தசாமி, இ.கா. சூடாமணி ஆகியோர் இழுத்துச் செல்லப்பட்டு பொலீஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டனர். ஊர்வலத்தில் திரண்டவர்கள் பொலிஸ் தாக்குதலுக்குப் பின்பும் கலந்து செல்லவில்லை. பொலிசாருடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்ட அவர்கள் யாழ் நகரின் கூட்டத்திற்கு ஊர்வலமாகச் செல்வதையே வற்புறுத்தி நின்றனர். மீண்டும் மோதல் வெடிப்பதைத் தவிர்க்க முழக்கங்கள் இன்றி யாழ் நகருக்கு நடந்து செல்வதற்கு பொலீஸ் அதிகாரிகள் அனுமதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அவ்வாறு எட்டு மைல்கள் நடந்து சென்ற ஊர்வலத்தினர் யாழ் நகரில் மிகப் பெரும் கூட்டத்தை நடாத்தினர். கூட் டத்திற்கு தோழர் டாக்டர் சு. வே. சீனிவாசகம் தலைமை தாங்கினார். கட்சியின் பொதுச்செயலாளர் நா. சண்முகதாசன், கே.டானியல், சி.கா. செந்திவேல் ஆகியோர் உரையாற்றினர். "அடித்தால் அடியை வாங்கிக் கொண் டிருந்த அடிமைத்தன நிலையை மாற்றி அடித்தால் திருப்பி அடிக்கும் புரட்சிகர நிலைப் பாட்டை தாழ்த்தப்பட்ட மக் கள் புரட்சிகரப் போராட்ட நிலைப் பாடாக முன்னெடுக்க வேண்டும். அதன் மூலமே உரிமைகளை வென்றெடுக்க முடியும். அதற்கு எமது கட்சி வழிகாட்டி தலைமை வழங்கும்"என்ற அறை கூவலை கட்சியின் சார்பாக விடுத்தனர். அன்று சுன்னாகத்தில் சாதியத்திற்கு எதிராகத் திரண்டெழுந்த மக்களுக்கும் தலைவர்களுக்கும் விழுந்த அடியானது "பிட்டுக்கு மண் சுமந்த சிவபிரான் மீது வீழ்ந்த அடி ஜீவராசிகள் அனைத்திற்கும் வீழ்ந்தது" என்று புராணக் கதையில் கூறப்பட்டது போன்றே தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவர் மீதும் வீழ்ந்த அடியாகியது.

அன்றைய எழுச்சியைத் தொடர்ந்து சாதிய தீண்டாமைக்கு எதிரான வடபுலம் தழுவிய கூட்டங்கள், ஊர்வலங்கள், கருத்தரங்குகள் என பரந்தளவில் முன்னெடுக்கப்பட்டன. அவற்றை சாதி ஆதிக்க சக்திகள் பொலீஸ் துணை கொண்டு அடக்க முற்பட்டன. அத்தகைய அடக்கு முறைகள் மேண்மேலும் அவ் இயக்கம் மக்களிடையே பரவக் காரணமாகியது. மக்கள் போராட்டங்களில் இறங்கத் தயாராகி வந்தனர். கட்சி அதற்கான போராட்ட மார்க்கத்தையும் செயல் தந்திரத்தையும் வகுத்து நின்றது.

சங்கானையில் உள்ள தேனீர் கடைகளில் சமத்துவம் போரி போராட்டம் ஆரம்பித்தது. அமைதியாகவும் சமாதனமாகவும் சமத்துவத்துடன் தேனீர் தரும்படி கேட்ட போது மறுப்பும் பலாத்காரமும் பதிலாகக் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து சங்கானையின் நிச்சாமம் கிராமம் சாதி வெறியர்களால் தாக்கப்பட்டது. அவர்களது துப்பாக்கிக்கு சின்னர் கார்த்திகேசு என்பவர் இலக்காகி உயிர் நீத்தார். வீடுகள் எரியூட்டப்பட்டன. பலர் காயங்கள் பட்டனர். ஆனால். மக்கள் அடி பணிந்து விடவில்லை. பதிலுக்கு போராடும் திடசங்கற்பத்துடன் எதிர்த்து எழுந்த னர். எதிரிகளின் பிற்போக்கு பலாத்காரத்தை முறியடிக்க தமது கைகளில் ஏந்தக் கூடிய அத்தனை ஆயுதங்களையும் எடுத்தார்கள். மக்களைப் பாதுகாத்து உரிமைகளை வென்றெடுக்க போராட்ட முன்னணியில் சங்கானை மக்கள் கட்சியின் தலைமையில் ஐக்கியப்பட்டு அணிதிரண்டனர். சங்கானைப் போராட்டத்தின் உக்கிரத்தையும் மக்கள் காட்டிய புரட்சிகர உறுதிப்பாடடையும் தொடர்ந்து வடபுலம் எங்கும் சாதிய தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்கள் முன் செல்ல ஆரம்பித்தன.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தியாகி சின்னர் கார்த்திகேசு அரங்கில் 1967ல் தோற்றம் பெற்றது. பொதுவுடைமை இயக்க ஆதரவாளரும் சமூக அக்கறை மிக்கவருமான எஸ்.ரி.என். நாகரட்ணம் அதன் தலைவ ராகத் தெரிவு செய்யப்பட்டார். உப தலைவர்களாக டாக்டர் சு.வே. சீனிவாசகம், மான் முத்தையா, கே.ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். வெ. சின்னையா, சி.கணேசன் இணைச் செயலளார்களாகவும் கே.டானியல், அமைப்பாளாராகவும் தெரிவு செய்யப்பட்டனர். முப்பத்தைந்து பேர் வரை பொதுச் சபையாகவும் தெரிவு பெற்றனர். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஒரு சாதிய அமைப்பாக அன்றி சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர்த்து நின்ற பொதுவுடைமைவாதிகள் ஜனநாயக சக்திகள் முற்போக்கு சிந்தனையுடையோர் நல்லெண்ணம் கொண்ட சமூக நலன் விரும்பிகள் போன்ற அனைவரையும் உள்ளடக்கிய ஒரு ஐக்கிய முன்னணி அமைப்பாகவே செயலாற்றியது. அதேவேளை புரட் சிகர பொதுவுடைமைக் கட்சியின் வர்க்கப் போராட்ட நிலை நின்ற அணுகுமுறையில் அமைந்த வழிகாட்டலும் தலைமைத்துவமும் அவ் வெகுஜனப் போராட்டங்களை வழி நடாத்திச் சென்றது.

சங்கானைப் போராட்டத்தைத் தொடர்ந்து சாவகச்சேரி, கொடிகாமம், அச்சுவேலி, நெல்லியடி- கன்பொல்லை போன்ற பகுதிகளில் தேனீர்கடைப் போராட்டங்கள் வெடித்தன. அப்போராட்டங்கள் சாதி ஆதிக்கவாதிகளையும் சாதி வெறியர்களையும் அவர்களுக்கு பக்கபலமாக நின்ற ஆளும் வர்க்க அரசு யந்திரமான பொலீசையும் எதிர்த்து தாழ்த்தப்பட்ட மக்கள் தமது போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுத்தனர். அதே வேளை மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில், தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் போன்ற பெரும் கோவில்களிலும் ஏனைய கோவில்களிலும் ஆலயப் பிரவேசப் போராட்டங்கள் இடம் பெற்றன.

சுமார் ஐந்து (1966–71) வருடங்கள் நீடித்த வெகுஜனப் போராட்டங்கள் சாதிய தீண்டாமையை உடைத்தெறிந்து கொண்டது. தேனீர்க் கடைகள், ஆலயங்கள், பாடசா லைகள் மற்றும் பொது இடங்களில் சமத்துவமும் ஜனநாயகமும் நிலை நாட்டப்பட்டது. இவற்றை வெற்றிகளாகப் பெற்றுக் கொள்வதற்கு இடம் பெற்ற புரட்சிகரமான வெகுஜனப் போராட்டங்கள் பல் வேறு வகையிலான அனுபவங்கள் பட்டறிவுகளை வழங்கியது. எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதை தெளிவாக்கியே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. உயர்த்தப்பட்டோர் எல்லோரும் எதிரிகள் அல்லர். அவர்கள் மத்தியில் உள்ள சாதி ஆதிக்க சக்திகளும் அவர்களது கையாட்களான சாதி வெறியர்களும் இவர்களுக்கு பக்–கபலமாக இருந்து வந்த அரசு யந்திரமான

தொடர்ச்சி 7ம் பக்கம

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 6

## கடவுள்களும் சாதிகளும்

பேராசிரியர் சி. சிவசேகரம்

"கடவுளும் நானும் ஒரு ஜாதி" என்றொரு சினிமாப் பாட்டை 40 ஆண்டுகட்கு முன்பு கேட்ட நினைவு. அந்தப் பாட்டு அவ்வளவு பிரபலமடையவில்லை. எனவே இன்று இருப்பவர்களிற் பலர் கேட்டிருக்கமாட்டார்கள். அந்தப் பாட்டு எழுதப்பட்ட பொருளில் இல்லாமல் "கடவுளும் நானும் ஒரு ஜாதி" என்பது சாதியச் சமூக அடிப்படையில் இன்னொரு கருத்தைப் பெறுகிறது.

மனிதருக்குள் சாதி இருப்பது போல கடவுளருக்குள்ளும் சாதி இருக்கிறது. கடவுளுடைய சாதி அடையாளத்துக்கும் அப்பால் கடவுள் வழிபாட்டு முறை, கோவில் அமைப்பு, சமயச் சடங்கு சம்பிரதாயங்கள் போன்ற பலவற்றுக்கும் சாதி அடையாளம் பொருந்துகிறது. நிலவுடைமைச் சமுதாயத்தில், வர்க்க அடையாளத்துக்கும் சாதி அடையாளத்துக்குமிடையே கணிசமான பொருத்தப்பர்டு இருந்தது. கொலனிய ஆட்சியாளரின் வருகை பழைய நிலவு டைமை அமைப்பை முற்றாகத் தகர்த்தெறியவில்லை. எனினும் சாதிகட்கிடையிலான உறவுகளில் அது சில முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தியது. நவீன தொழில் முறைகளின் வருகையும் முதலாளிய அடிப்படையிலான வர்க்கங்களின் உருவாக்கத்துக்கு உதவினாலும் சாதியம் இன்னமும் தென் ஆசிய சமூகங்களில், முக்கியமாக இந்து சமூகங்களிலும் கணிசமான அளவில் கிறிஸ்துவ சமூகங்களிலும் ஊறிப்போயிருக்கிறது. சமூக மாற்றங்களையொட்டிச் சாதிய இறுக்கம் வெவ்வேறு அளவுகட்குத் தளர்ந்தாலும் சமயம் என்பது சாதிய அடையாளத்திலிருந்து விடுபடவில்லை. சாதி அடையாளத்தின் சமூக முக்கியத்துவம் இல்லாதொழியும் வரை சமயத்தில் சாதி அடையாளம் ஒழியாது. ஏனெனில் சாதி என்பது கடவுளின் பேரால் இன்று இந்து சமயமாக அடையாளம் பெறுகிற பிராமணச் சமயம் (அல்லது சமயங்களின்) அடிப்படையிலேயே நிலைநிறுத்தப்பட்டு நியாயப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ஒவ்வொரு சாதிக்குமுரிய தனித்தனியான கடவுளர் இருந்து வந்துள்ளனர். தென்னாசிய சமூகங்களின் மரபு வழிச் சமயங்கள் பலவும் பிராமண சமயச் செல்வாக்குக்கு உட்பட்டுள்ளன. அவ்வாறான பிராமண சமயச் செல்வாக்குக்கு உட்பட்டதன் அடிப்படையிலே அவற்றுக்கு "இந்து" என்ற அடையாளத்தை வழங்க முடிந்திருக்கிறது. எனினும் பல்வேறு சாதியினரும் சமூகங்களும் கடைப்பிடித்து வந்த மதங்கள் எல்லாம் முழுமையாகப் பிராமணச் சமயத்தை உள்வாங்கவில்லை என்பதோடு உள்வாங்கப்பட்ட விடயங்கள் பழைய சமயங்களின் வெவ் வேறு அம்சங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கவும் காணலாம்.

மூதாதையர் வழிபாடு, வீர வழிபாடு என்பன உலகின் ஆதி மனித சமூகங்கள் பலவற்றிலுங் காணப்பட்டவை. அவற்றின் சிந்தனைத் தொடர்ச்சியை நாம் குறிப்பிட்ட சாதிகளுக்குரிய கடவுளரிற் காணலாம். உருவமும் அருவமும் அற்று விருப்பு வெறுப்புக்கட்கப்பாற்பட்டதாக இந்துத் தத்துவங்கள் அடையாளங் காட்டக்கூடிய பிரம்மம் போன்ற கடவுட் கோட்பாடுகளை ஏற்பவர்கட்கு உண்மையில் வழிபாடு தேவையில்லை. வழிபாட்டுக்குரிய கடவுளர் ஒவ் வொரு சமூகச் சூழலையும் ஒட்டி உருவாக்கப்படுகின்றனர் அல்லது உள்வாங்கப்பட்டு உருமாற் றப்பட்டுப் புதிய சமூக அடையாளத்தைப் பெறுகின்றனர். தம்மை வெவ்வேறு அடையாளப்படுத்தும் பல்வேறு சமூகப் பிரிவுகளின் கூட்டமைப் பாக உள்ள ஒரு சமூகத்தில் ஒவ்வொரு சமூகப்பிரிவும் தன்னை வேறுபடுத்தி அடையாளங் காட்டுகிறது. தனது தனித்துவத்தை வலியுறுத்துகிற ஒரு சமூகப் பிரிவு, அத்தனித்துவத் தைத் தனக்குரிய கடவுளரின் வடிவிலும் வலியுறுத்துகிறது. சமயம் சார்ந்த சடங்குகளிலும் அந்தத் தனித்துவத்தை அது காட்டிக் கொள்ளுகிறது.

பண்பாடு என்பது காலத்துடன் மாறுவது போல பொதுவான மாற்றங்களையும் குறிப்பிட்ட ஒரு சமூகப்பிரிவினருக்கு நிகழக் கூடிய சமூக மேன் நிலையாக்கத்தையும் பிற சமூகப் பிரிவினருடனான உறவுகளின் ஏற்படக்கூடிய மாற்றங்களையும் ஒட்டிக் கடவுளரது சமூக அடையாளமும் மாறலாம். அவ்வாறே சடங்கு சம்பிரதாயங்களும் மாறலாம். இதற்கான உதாரணங் களை நமது சமூகச் சூழலிலேயே நாம் காண முடியும்.

ஆறுமுக நாவலரின் காலத்தில் 'சிறு தெய்வ' வழிபாட்டுக்கும் வழிபாடுகளுடன் தொடர்பான பலவேறு சடங்குகட்கும் எதிரான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை சைவ சித்தாந்தம் என்று இங்கு சொல்லப்படுகிற யாழ்ப்பாணச் சைவ வேளாளச் சிந்தனையின் மேலாதிக்கத்தை மனதிற்கொண்டு மேற்கொள்ளப்பட்டன எனலாம். இவ்வாறான சிறுதெய்வ மறுப்பு சாதிகட்கு அப்பாற்பட்ட முழுமுதற் கடவுளினதோ அக்கடவுளின் அடையாளம் பொருந்திய ஒரு வலிய பெருந் தெய்வத்தினதோ வழி பாட்டுக்குள் தாழ்த்தப்பட்ட சாதியினரைக் கொண்டு வரும் முயற்சி மட்டுமே. எனினும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தெய்வமோ தெய்வங்களோ தமது சாதிய அடையாளத்தை விட்டுக் கொடுக்கவில்லை.

பிராமணர் அல்லாதோர் தீண்டத்தகாதவையாகத் தெய்வங்களின் சிலைகளும் குறிப்பிட்ட சமூகத்தினர் நுழைய இயலாதவையாக அத் தெய்வங்களின் கோயில்களும் இருந்தன. சமூகத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கிற மக்கள் தமது சாதி அடையாளத்தைப் பற்றிப் பெருமைப்பட இயலாத நிலையில் வைக்கப்பட்டிருக்கிற போது அவர்கள் அந்தத் தாழ் நிலையிலிருந்து விடுபட விரும்புகின்றனர். அந்த விடுதலைக்கான முயற்சிகள் பல்வேறு திசைகளில் நடக்கக் காணலாம்.

உற்பத்தி உறவுகளில் உள்ள நிலவுடைமையின் பிடியும் ஏற்றத்தாழ்வும் உடையும் போதே சாதியால் தாழ்த்தப்பட்டோர் விடுதலை அடைய வாய்ப்புக் கிடைக்கிறது. அந்த வாய்ப்பை அவர்கள் ஒரு குறிப்பிட்ட சாதிப்பிரிவாகவோ அல்லது ஒரு சாதிப்பிரிவுக்குட்பட்ட ஒரு பகுதியினராகவோ அல்லது தனி மனிதர்களாகவோ அவரது நெருங்கிய உறவினர்களுமாகவோ பயன்படுத்தலாம். முதற் கூறப்பட்ட இரண்டிலும் தமது சாதி அடையாளத்தை முற்றாக மறுக்காமல் ஆயினும் பிற தாழ்த்தப் பட்ட சமூகங்களைவிடத் தங்களை மேலாகக் காட்டிக் கொள்கிற முனைப்பைக் காணலாம். பின்னையது ஒரு தனிமனிதரோ குடும்பமோ தங்களது சாதி அடையாளத்தைக் கரைத்து வேறொரு அடையாளத்தைப் பெற்றுக் கொள்வதாக அமையும். இவையாவும் வரலாற்றில் நிகழ்ந்தவை, இன்றும் நிகழுகிறவை.

ஒரு சமூகமோ சமூகப்பிரிவோ தனிமனிதரோ சமூக மேல்நிலை பெறுகிற போது அவர்களது கடவுளுக்கும் அவ்வாறான மேல் நிலை பெறும் தேவை ஏற்படுகிறது. அல்லாத போது அவர்களது கடவுள் ஒரு வறிய உறவினரைப் போலக் கைவிடப்பட்டுப் புதியதொரு கடவுள் அவரது இடத்தைப் பிடிப்பர். ஏனெனில் சாதி மேனிலையாக்கம் என்பது சாதியச் சமூகங்களில் எந்தெந்தச் சாதிகள். ஆதிக்கத்தில் உள்ளனவோ அந்தச் சாதிகளின் நடைமுறைகளை உள்வாங்குவதாகவும் கருதப் படுகிறது.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் சமூக மேநிலையாக்கம் பெற்ற வெள்ளாளர் எல்லோரும் வெள்ளைய ரின் நடையுடை பாவனைகளைப் பின்பற்றினர். பகுத்தறிவுவாதம் பேசிப் பார்ப்பனியத்தையும் பார்ப்பனரையும் திட்டித் தீர்த்த தமிழகப் பகுத்தறிவுவாதிகள் பலர் இப்போது பார்ப்பனிய நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர். இவையெல்லாம் ஒரு சமுதாயத்தில் ஒரு நேரடியான அதிகாரமோ சமுதாயத்தில் ஊறிப்போயுள்ள ஆதிக்க நிலையிலுள்ள சிந்தனையோ ஒருவரை ஒடுக்கினாலும், அவர் அந்த அதிகாரத்தையோ ஆதிக்கச் சிந்தனையையோ நிராகரிக்காமலும் சமுதாயத்தின் அமைப்பை அதிகம் குழப்பாமலும் தன்னை மேநிலைப்படுத்த முயலுகிற போது, ஒடுக்குமுறை சார்ந்த சிந்தனைகளையும் உள் வாங்கிக் கொள் ளுகிறார்.

தன்னை ஏற்க மறுத்த கடவுளைத் தனதாக்கிக் கொள்ளுவதும் தனக்கு மறுக்கப்பட்ட சடங்குகளைத் தனதாக்கிக் கொள்வதும் ஒரு தனி மனிதர் தனது சமூக அடையாளத்தைக் கரைத்து விட்டுச் செய்கிற காரியம் மட்டுமல்ல, சமூக மேநிலையாக்கம் பெற்ற ஒரு சமூகப்பிரிவு தனது சாதி, அடையாளத்தை வைத்துக் கொண்டே செய்யக்கூடிய காரியமுமாகும்.

இதற்கான காரணம் தனது சாதி போன்று தனது கடவுளரும் தனது வழிபாட்டுமுறையும் சடங்கு சம்பிரதாயங்களும் தன்னை ஒடுக்கி வந்தவர்களது சாதி கடவுளர் வழிபாடு சடங்கு சம்பிரதா யங்களை விடத் தாழ்ந்தோர் என ஏற்றுக்கொள்ளுகிற ஒரு நிர்ப்பந்தத்துடன் தொடர்புடையது. அதை விடவும் தன்னையோ தம்மையோ தொடர்ந்தும் தாழ்நிலையிலுள்ள மக்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிற தேவையும் இங்கு செயற்படுகிறது.

உண்மையில் இங்கே நடப்பது ஒரு வகையான மதமாற்றமே. முன்னர் பொருளாதாரத் தேவையாலோ சாதிக் கொடு மையாலோ சுயமாக மதம் மாறினவர்களது மதமாற்றத்திற்கும் இப்போதைய மதமாற்றத்துக்குமிடையிலான வேறுபாடு அவற் றுக்கான கால அளவும் பின்னையதன் படிப்படியான மாற்றமும் சார்ந்தது. ஆபிரிக்காவில் கிறிஸ்துவமும் தென்கிழக்காசியாவில் இஸ்லாமும் பழைய நம்பிக்கைகளையும் சடங்குகளையும் முற்றாகத் துடைத்தழிக்கவில்லை. யாரும் அவ்வாறு செய்ய முயன்றிருந்தால் புதிய மதம் முற் றாக நிராகரிக்கப்பட்டிருக்கும். இங்கே நிகழும் மதமாற்றம் பழைய மதத்துக்கும் பிராமண மதத்தன்மையை உருவாக்குகிற விதமாகவே புதிய பிராமண மதத்தை வெளிவெளியான அடையாளமாகக் கொண்டு பழையதன் கூறுகளை அந்தரங்கமாகப் பேணுவதாகவோ அமையலாம்.

இவ்வாறு கடவுளரும் சடங்கு சம்பிரதாயங்களும் வழிபாட்டு முறைகளும் மாற்றமடைவதன் மூலம் சமத்துவமான சமூகம் ஏற்படுவதில்லை. ஏற்றத் தாழ்வு களின் அமைப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால் ஏற்றத் தாழ்வுகள் தொடருகின்றன.

அம்பேத்கர் புத்த மதத்தைத் தழுவும்படி தனது ஆதரவாளர்களை அழைத்தன் மூலம் சாதியத்திற் கெதிராகக் கிளர்ச்சியை நடத்த முடிந்தது. ஆயினும் சாதியத்தை முறியடிக்க அது போதுமான தாக இருக்கவில்லை. ஈ. வெ. ரா. பகுத்தறிவு வாதத்தையும் நாத்திகத்தையும் முன்னிறுத்திய போதும் வர்க்கப் பரிமாணத்தைத் தவற விட்டதாலும்

தொடர்ச்சி 8ம் பக்கம்

---

**தமிழர் வரலாற்றில்............**

6ம் பக்க தொடர்ச்சி.

பொலீஸ் படையும் தான் தாழ்த்தப்பட்ட மக்களின் எதிரிகளாக இருந் தனர். அதேவேளை அப்போராட்டங்களில் உயர்த்தப்பட்டோர் மத்தியில் உள்ள பொதுவுடைமைவாதிகள் மற்றும் இடதுசாரிகள் ஜனநாகவாதிகள் சமூக நலன் விரும்பிகள் இப்போராட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்களோடு இணைந்து நின்று போராடினர் என்பது மிக முக்கிய விடயமாகும். சாதி வாதமும் தலித்தியமும் முன்னிறுத்தப் படக் கூடிய இன்றைய சூழலில் இவ் விடயம் வர்க்க நிலைப்பாட்டிற்குரிய வரலாற்று அனுபவமாக அமைந்திருந்தது.

சட்டரீதியானதும் சட்டமறுப்பானதும் ஆயுதங்களைக் கையாண்டதுமான அன்றைய புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களில்15 வரையானவர்கள் தமது இன்னுயிர்களை இழந்து தியாகிகள் ஆகினர். பலர் பாடுகாயங்கள்பட்டனர். சிறை சித்திரவதைப்பட்டனர். ஆனால் எச்சந்தப்பத்திலும் போராட்டத்தை தளர்த்தவோ கைவிடவோ இல்லை.

நாற்பது வருடங்களுக்கு முன்பு இடம் பெற்ற ஒக்ரோபர் 21 எழுச்சியும் அதன் பாதையிலான போராட்டங்களும் பெறுமதி மிக்க அனுபவங்களையும் பட்டறிவுகளையும் தந்தன. பொதுவுடைமைவாதிகளின் வெகுஜனப் போராட்டப் பயிற்சிப் பட்டறைவுளாகவும் பிற்கால தலைவர்களின் தொட்டிலாகவும் அன்றைய வெகுஜனப் போராட்டங்கள் அமைந்தன. இன்றை தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டம் உச்ச நிலையில் இருந்து வரும் இன்றைய சூழலில் அன்றை புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களின் அனுபவங்கள் மிகக் கனதியும் பெறுமதியும் மிக்கவையாகும். ஆனால் துர்ரதிஷ்டம் என்னவெனில் தமிழ்த் தேசியவாதத்தை முன் நிறுத்துவோர் அத்தகைய வெகுஜனப் போராட்டங்களில் இருந்த பல்வேறு சாதகமான அம்சங்களைப் படிப்பதற்கு தயார் இல்லாத நிலையில் இருந்து வருவதாகும். அன்று கூட தமிழ்த் தேசியவாதத்தின் பாராளுமன்றத் தலைமைகள் இவ் வெகுஜனப் போராட்டங்களை துளியளவும் ஆதரிக்கவில்லை.

கடந்த காலத்தின் படிப்பினைகள் ஒவ்வொன்றும் நிகழ் காலத்திற்கு அவசியமானவையாகும். அவ்வாறே நிகழ் காலம் தான் எதிர்காலத்திற்கு அடிப்படையாகின்றது. எனவே தமிழர் வரலாற்றில் நீண்டு நிலைத்து வந்த உயர்த்தப்பட்டோராகவும் தாழ்த்தப்பட்டோராகவும் பிரி த்து இரண்டு வகைத் தமிழரை நிலைப்படுத்தி வந்த சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர்த்து முறியடித்த வரலாற்று நிகழ்வே 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியாகும். அதில் முன்னின்று போராடியவர்கள் தலைமை தாங்கியவர்கள் முன்னோடிகளாக இருந்தவர்களில் பலர் இன்று மறைந்து விட்டனர். அத்தகையோரை இந்நாற்பதாவது ஆண்டு நினைவின் போது உயர்ந்த புரட்சிகர கௌரவத்துடன் நினைவு கூர்கின்றோம்.

முரண்பாடுகளின் வகைகளையும் வளர்ச்சிகளையும் யதார்த்த நிலைமைகளின் ஊடாக அடையாளம் கண்டு அவை சார்ந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்திற்கு சரியான கொள்கை வகுத்துக் கொள்வது பிரதானமானதாகும். அத்தகையை நிலைநின்று மக்களை அணிதிரட்டி சரியான தந்திரோபாயங்களின் ஊடாக போராட்டங்களை முன்னெடுப் பது அவசியமானது என்பதனையே அன்றைய போராட்டங்கள் வரலாற்று அனுபவமாக வழங்கிச் சென்றன என்பதை இவ் வேளை நினைவ கூர்ந்து கொள்வது அவசியமானதாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# தண்ணீர் தண்ணீர்

உலகில குடிநீர் தேவை என்பது நாளாந்தம் அதிகரித்துச் சென்ற வண்ணமே உள்ளது. ஒரு புறம் பற்றாக்குறையும் பெற முடியாமையும் அதிகரித்து வர மறுபுறத்தில் குடி நீரை வர்த்தக மயப்படுத்தி கொள்ளை லாபமாக்கிக் கொள்வதில் பல்தேசியக் கம்பனிகள் மும்மரம் காட்டு கின்றன. அவற்றைப் பின்பற்றி ஒவ்வொரு நாடுகளிலும் இத்தண்ணீர் வர்த்தகம் “சுத்தமான நீர்” என்ற பாரிய விளம்பரங்களுடன் ஓகோ என நடாத்தப்படுகிறது. என வே குடிநீர் பற்றிய சில உண்மைகளைக் கண்டு கொள் வது அவசியமா கின்றது.

உலகின் நீர் வளத்தில் 98 வீதம் கடல் நீராகவுள்ளது. மேலும் 1. 4 வீதம் பனிக்கட்டியாகவுள்ளது. மிகுதியாய் உள்ள 0.6 வீதத்தில் 0. 03 வீதம் மட்டுமே குடிநீராகவுள்ளது என்பதை ஆழ்ந்து நோக்குவதும் அவசியமானதாகும்.

இலங்கையில் நீர்வளம் உள்ளது என்று கூறப்பட்ட போதிலும் குடிநீர் பெரும் நெருக்கடிக்குள்ளாகி வருகின்றது. நுவரேலியாவில் கிறேகரி குளத்தில் ஒரு லீட்டர் நீரில் 112 மி. கிராம் நைத்திரேத் படிவம் காணப்படுகிறது. அதே சமயம் பிளாக்பூரில் 60 ம. கிராம் நைத்திரேத் படிவம் உள்ளது. வெலிமடைப் பள்ளத்தாக்கில் 10 மி. கிராம் நைத்திரேத் படிவம் காணப்படுகிறது. இரசாயன உரம் பயன்படுத்துவ தாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2015ம் ஆண்டளவில் உலகம் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாட்டை எதிர்நோக்குமெனவும் இலங்கையும் விரைவில் அந்நிலையை எதிர்கொள்ளுமென்றும் நீர் முகாமைத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையுட்பட பல்வேறு நாடுகளில் குடி நீரை போத்திலில் அடைத்து விற்பது பெரும் எடுப்பில் இடம் பெறுகிறது. போத்தல் நீர் வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஆடம்பரமாக விளம்பரம் செய்யப்படுகிறது. போத்தலில் அடைத்துவிற்கும் நீரின் விலையானது குளாய் நீரின் விலையை விட ஆயிரம் மடங்காகவுள்ளது. போத்தல்களில் நீரை அடைத்து தந்திரமான வழிகளில் மிக உயர்ந்த விலையில் விற்பனை செய்ப வர்கள் உலகில் ஏற்கனவே அருகிவரும் நீர் வளத்தை மேலும் சூறையாடுவதுடன் சூழலையும் மாசுபடுத்துகின்றனர்.

அழகிய மலைச் சாரலையும் நீர்வீழ்ச்சியையும் கொண்ட விளம்பர லேபலையுடைய ஒரு லீட்டர் தண்ணீர்ப் போத்தல் ஒன்று சுப்பர் மார்க்கட்டில் ஒரு டொலருக்கு விற்கப்படுகிறது. குழாய் மூலம் பெறப்படும் ஒரு லீட்டர் நீரின் விலை இதன் பத்தில் ஒன்றாகும். வருடந்தோறும் போத்தல்களில் அடைத்து விற்கும் நீர் வியாபாரம் ஆயிரம் கோடி டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வர்த்தகத்தில் ராட்சத பல்தேசியக் கம்பனிகளே ஈடுபட்டு வருகின்றன.

போத்தல்களில் அடைந்துவிற்கும் நீரில் குறைந்தது மூன்றில் ஒரு பகுதி அங்கீகரிக்கப்பட்ட தூய்மையை கொண்டிருக்கவில்லை எனப் பரிசோதனைகள் வெளிப்படுத்தியுள்ளன.

அடைக்கப்பட்ட போத்தல்களில் லேபல்கள் கவர்ச்சிகரமான முறையில் மக்களை ஏமாற்றுகின்றன சுத்தமானவை என்றும் உரிய அளவுகளில் விட்ட மின்கள் உண்டு என்றும் எழுதப்பட்டுள்ளன. ஆனால் சாதாரண குழாய் நீரைக் கொண்டே 25 வீதமானவை போத்தல்களில் அடைக்கப்ப டுகிறது. இத் தண்ணீர் வர்த்தகப் பெருச்சா ளிகள் தமது பண்டங்களுக்கு “ஊற்று நீர்” என்று கூறி விற்பனை செய்வதற்கு சட்டம் அனுமதிக்கின்றது நீரைப் போத்தல்களில் அடைக்கும் தொழிலினது சுற்றாடலை மாசடையச் செய்கின்றது. நிலத்தடி நீரை இறைப்பதன் மூலம் ஊற்று வற்றிப் போகிறது. நாலு கோடி இறாத்தல் பிளாஸ்ரிக்கில் ஐந்து வீதமானவையே மீளப் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ளவை கழிவுப்பொருளாகிறது. இது பாரிய சூழல் மாசடையும் பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது.

நெஸ்லே நிறுவனம் 77 பெயர்களில் நீரைப் போத்தல்களில் அடைத்து சந்தைப்படுத்துகின்றது. போத்தல்களில் நீரை விநியோகிப்பதில் அமெரிக்க சந்தையின் அரைவாசியை இந்த நிறுவனம் கொண்டுள்ளது கவனிக்கத்தக்கது.

கொக்காகோலா நிறுவனம் டசானி, டனோன் கின்லி, ஸ்பாக் லட்ஸ் போன்ற பெயர்களில் நீரைப் போத்தல்களில் அடைத்து விற்பனை செய்து வருகிறது. கோக் நிறுவனம் “சுத்தமான நீர்” என விளம்பரம் செய்து வருகிறது. ஆனால் அந்த “சுத்தமான நீர்” லண்டன் நகரின் குழாய் நீரில் இருந்தே அடைக்கப்பட்டது என்பது பிரித்தானியவில் அம்பலமாயுள்ளது. இதே நிறுவனம் அமெரி க்காவிலும் குழாய் நீரையே போத்தல்களில் அடைத்து சுத்தமான நீர் என விற்பனை செய்கிறது. கோக் நிறுவனத்தைப் போலவே பெப்சி நிறுவனமும் மலையடி வராத்து ஊற்றிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்வதாக ஏமாற்றி குழாய் நீரைப் போத்தல்களில் அடைத்து விற்கிறார்கள். இத்தகைய போத்தல் நீரைப் பருகுவது பாதுகாப்பானது என மக்கள் நம்பவைக்கப்படுகின்றனர். அதுவே இன்றைய குடிநீர்ப் பண்பாடாகவும் கொள்ளப்படுகிறது.

21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தி லேயே உல கம் ஒரு நீர் நெருக்கடியை எதிர்நோக்கு கின்றது. உலகில் இன்று 130 கோடி மக்கள் சுத்தமான நீரின்றிருப்பதாகவும் மேலும் 250 கோடிமக்கள் முறையான வடிகால் வசதியையோ சுகாதார வசதியையோ கொண்டிருக்க வில்லையென ஐ.நா தகவல் கூறகிறது. 31 நாடுகள் நீர் பற்றாக் குறையை எதிர்நோக்குகின்றன. இருபது வருட த்திற்கொரு தடவை உலகின் நீர்த் தேவை இரட்டிப்பாகிறது. 2025ம் ஆண்டளவில் உலகின் நீர்த்தேவை உலக வழங்கலை விட 56 வீதம் அதிகமாயிருக்கு மென மதிப்பிடப்பட்டுள்ளது.


-தொகுப்பு சீறி-

# அமெரிக்காவின் அடிவருடியாக ஐ.நா. செயலாளர் நாயகம்

ஐ. நா. சபையின் புதிய செயலாளர் நாயகமாக தென்கொரியாவைச் சேர்ந்த பான்- கீ- மூன் தெரிவாகியிருக்கிறார். இம் முறை ஆசிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது ஏற்கப்பட்டிருந்தது. இந்தியா தாய்லாந்து இலங்கை பாகிஸ்தான் தென் கொரிய இராஜதந்திரிகள் மேற்படி பதவிக்கு போட்டியிட்டனர். ஐ. நா சபை என்பது அமெரிக்காவின் சபையே என்பதற்கு ஏற்ப அமெரிக்காவின் விருப்பத்திற்குரிய தென்கொரிய இராஜதந்திரியான பான்- கீ- மூன் தெரிவாகினார். அமெரிக்காவின் ஆதிக்கத்தை மீறி ஐ.நா. சபையில் செயல்பட பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளுக்கு துணிவு இருக்கவில்லை.

தெரிவு செய்யப்பட்ட புதிய ஐ. நா. செயலாளர் நாயகம் தனது அமெரிக்க விசுவாசத்தைக் காட்ட எவ்வித தயக்கத்தையும் கொள்ளவில்லை. வட கொரியாவின் அணு ஆயுத வெடிப்பு விடயத்தில் அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என இப் புதிய செயலாளர் நாயகம் கூறியுள்ளமை அமெரிக்காவிற்கான அடிவருடி விசுவாசமேயாகும். ஏற்கனவே செயலாளர் நாயகமாக இரண்டு தடவை பதவி வகித்த ஆபிரிக்கரான கோபி அனன் அமெரிக்காவின் தயவில் பதவியை தக்க வைத்து ஐ. நா சபையை அமெரிக்க சபையாக நடாத்தி வந்த ஒருவரேயாவர். இப்போது அந்த வேலையைத் தொடர ஒரு ஆசிய நாட்டவரான பான்- கீ- மூன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உலகின் அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் பேச்சு மன்றமான ஐ. நா விடம் எதிர்பார்க்க ஒன்றுமில்லை என்பதையே கடந்தகால- சமகால நிகழ்வுகள் எடுத்துக் காட்டி வந்துள்ளன. அமெரிக்க ஏகாதிபத்திம் தோற்கடிக்கப்படாதவரை இந்நிலை நீடிக்கவே செய்யும்.

# இந்திய மேலாதிக்கத்திற்கு சாமரை வீசும் வ.ஐ.ச.ஜெயபாலன்



வ.ஜ.ச. ஜெயபாலன் ஒரு காலத்தில் இலங்கையின் ஒரு முக்கியமான இளந்தமிழ்க் கவிஞராகத் தமிழகத்தில் அறியப்பட்டிருந்தார். ஆனால், தமிழ் மக்களின் வாழ்வும் விடுத லைப் போராட்டமும் போராட்டத்திற்குரிய திசையும் பற்றி ஜெயபாலன் கடந்த பதினைந்தாண்டுகளில் உருப்படியாக எதையுமே தனது கவிதைகளிலோ கருத்துரைகளிலோ தந்ததாகச் சொல்ல இயலாது.

இடதுசாரிக் கட்சிகள் ஒவ்வொன்றும் தம்மைச் சுயவிமர்சனப் செய்ய வேண்டும் என்று வாய்ப்புக்கிடைக்கிற போது எல்லாம் வற்புறுத்தத் தவறாத ஜெயபாலனுக்குத் தன்னுடைய அரசியலையும் தன்னுடைய சமூக நடத்தையையும் சுயவிமர்சனம் செய்கிற மன ஓர்மம் இருந்ததில்லை. ஜெயபாலனின் முரட்டுத்தனமான வாதங்களும் ஆத்திரமான பேச்சுக்களும் ஒரு காலத்தில் அவர் மனதில் பட் டதை அப்படியே சொல்கிறவர் என்ற எண்ணத்தை ஏற்படுத்தினார். அக்காரணத்தாலே அவரது குற்றங்களைப் பலர் பொறுத்துள்ளனர். ஆனால் அவரது அண் மைக்கால நடத்தை குறிப்பாகத் “தீரா நதி” என்ற குமுதம் நிறுவனத்தின் ‘இலக்கிய’ சஞ்சிகையின் ஒக்டோபர் இதழில் வெளிவந்த நேர்காணல் அவரது நேர்மைபற்றிக் கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளது. நேர்காணலில் வரும் அவரது அரசியல் ஆய்வுகளின் வழக்கமான குழம்பிய சிந்தனைகட்கும் அப்பால் இக்கேள்விகள் எழுகின்றன.

1990ல் முஸ்லீம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட போது அதை வண்மையாக விமர்சித்தவர் ஜெயபாலன். அது பற்றிய அவரது “யானை” என்ற கவிதை மிகவும் பாராட்டப்பட்டதும் அவரது பின்னைக் காலக் கவிதைகளில் குறிப்பிடப்படத்தக்கதுமாகும். ஆனால் மூன்று ஆண்டுகட்கு முன் வெளியான அவரது கவிதைகளில் “பெருந் தொகை” அக்கவிதையைத் தவறவிட்டு விட்டது. 1990களின் முன் பாதியில் முஸ்லீம்களின் நண்பராக அறியப்பட்ட ஜெயபாலன் இப்போது விடுதலைப் புலிகளின் எதிரிகள் என்று தனது முன்னாள் நண்பர்களுக்கு முத்திரை குத்திக் கொண்டு திரிவதாக அவர்கள் மன வருத்தப்பட்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் மீதான ஜெயபாலனின் உண்மையான வாரப்பாட்டால் அவர் அப்படிச் செய்ய வில்லை. இந்தி யாவின் நடத் தையை விமர்சித்து வந்த அவர். இப்போது தமிழகத்தில் தங்கியிருக்கிறார். திடீரென மறுபடி இந்தியாவின் நண்பராகி விட்டார். இந்தியா விடுதலைப் புலிகளுடன் தனது மனத்தாப த்தைக் கைவிட்டு இலங்கையின் ஆட்சியாளர்கட்கு எதிராகத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்பதே தீராநதியில் அவ ரது நேர்காணலின் தொனி. தீராநதியில் அவர் சொன்னவை, இந்திய மேலாதிக் கவாதிகள் எதைக் கேட்க விரும்புவர் எனவும் தீராநதி போல ஒரு இந்திய மேலாதிக்க நிறுவனச் சார்பான ஏடு எதைப் பிரசுரிக்கும் எனவும் யோசித்துச் சொன்னவையே ஒழிய, தமிழக மக்கள் அறிய வேண்ய உண்மையான நிலைமைகள் அல்ல.

இந்தியாவின் மேலாதிக்கம் இலங்கை அரசாங்கத்தை ஏன் ஆதரிக்கக் கூடாது என்பதற்கு அவர் முன்வைத்திருக்கிற நியாயம் முழு முட்டாள்தனமானதும் இலங்கையில் சீனாவும், பாக்கிஸ்தானும் அமெரிக்காவும் கூடிய ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விட்டதால் இந்தியா இலங்கை அரசாங்கத்தை நம்பக் கூடாது என்பது அவ ரது வாதத்தின் அடிப்படை. பாக்கிஸ்தான் இலங்கைக்கு ஆயுதங்கள் விற்பதும் படைகட்குப் பயிற்சி அளிப்பதும் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிற ஜெயபாலன் அமெரிக்கா என்ன செய்கிறது என்பது பற்றி விவரம் எதுவுமே கூற வில்லை. சீனா என்ன செய்யப்பார்க்கிறது என்றும் அவரால் சொல்ல முடியவில்லை. சோவியத்- அமெரிக்க கெடுபிடி யுத்தக் காலச் சமன்பாட்டை இன்று அமெரி க்கா- இஸ்ரேல்- இந்திய அச்சு ஒன்று உருவாகி வருகிற இன்றைய சூழலில் அவர் சொல்லுவது பல தசாப்தங்களாக நித்திரையாய் இருந்து எழுப்பித் தன்னைச் சூழ இருந்த சமூகத்தை அறிய முடியாது திணறிய “றிப் வான் வின்கிள்” (Rip Van Winkle) என்கிற சிறுவர் கதையின் நாயகனை நினைவூட்டுகிறது.

ஜெயபாலன் உருப்படியாகச் செய்த சில காரியங்களில் யாழ்ப்பாணச் சாதியம் பற்றிய ஆய்வு முயற்சி ஒன்று. ஆனால் அதை முழுமைப்படுத்த அவரால் முடியவில்லை. சமூக உணர்வுள்ள தொடக்கக் காலக் கவிதைகளின் தரத்தைப் பிற்காலக் கவிதைகள் எட்டாததற்கு அவற்றில் அவரது தற் கழிவிரக்க மிகுதியும் ஒரு காரணம் என்றே சொல்லலாம்.

பேராசிரியர்கள் கைலாசபதியும் இந்திரபாலாவும் யாழ்ப்பாண வளாகத்தி தலைமையில் இருந்த போது அவர்கட்கு ஒரு முகமும் பின்பு தேசியவாதிகளது கை ஓங்கிய போது புளொட் டுடன் கூட இருந்து இன்னொரு முகமும் அதன் பின்பு புலி ஆதரவ புலிகள் மீதான விமர்சனம் என்று மாறி மாறி இப்போது இந்திய மேலாதிக்க ஆதரவு என்கிற முகமும் காட்டுகிற ஜெயபாலனின் வேஷத்தைக் கண்டு இந்திய மேலாதிக்க வாதிகளளோ விடுதலைப் புலிகளோ ஏமாற இடமில்லை.

மன்னர்களின் புகழ்பாடிப் பொருள் தருவோரை ஏற்றுவதும் தராதோரைத் தூற்றுவதும் தமிழ்க் கவிதை மரபில் ஒரு காலத்தில் இருந்து வந்த இழிவான நடத்தை, ஜெயபாலன் அந்தப் பாரம்பரியத்திலிருந்து வெகு தொலைவில் இல்லை என்பதையே அவரது காலத்துக்கு காலம் வெளியிடும் கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

*~சிவா~*

*கடவுள்களும் சாதிகளும்.....*

7ம் பக்க தொடர்ச்சி..

சாதிய எதிர்ப்பை அதன் முக்கிய பரிமாணமான பிராமண ஆதிக்க எதிர்ப்புக்குட் பெருமளவும் குறுக்கிக் கொண்டதாலும் சாதியத்திற்கெதிரான வெற்றிகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட நேர்ந்தது.

மக்களைக் கடவுள் நம்பிக்கையிலிருந்து விடுபடுத்துவது சமூக நீதிக்கான ஒரு போராட்டத்தின் பிரதான இலக்குமல்ல முக்கிய மான இலக்குக்களில் ஒன்று மல்ல. ஆயினும் சமூகத்தில் மேநிலையாக்கம் பெறுவதற்கான வழியாகத் தாழ்த்தப்பட்டோர் தமது மதத்தைப் பிராமண மதமாக்குவது விடுதலைக்கான வழியாகாது என்பது பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும். ஒரு சமூகம் தனது வழிபாட்டு முறைகளையும் சடங்கு சம்பிரதாயங்களையும் காலத்துடன் மாற்றிக் கொள்ளுவது தவிர்க்க இயலாதது. எனினும் அது எந்த நோக்கத்தில் எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதே நமது கவனத்துக்குரியது.

இந்து சமயங்களில் உட்பொதிந்துள்ள ஒரு முக்கிய பண்பான பிராமணச் சிந்தனையும் சாதியமும் அவற்றோடு ஒட்டி அமைந்துள்ள சடங்கு சம்பிரதாயங்களும் மூட நம்பிக்கைகளும் சமூக ஏற்ற த்தாழ்வுகளோடு உறவுடையவை என்பதை மனதிற்கொண்டே இந்து என்கிற அடையாளத்தினுள் நிகழக்கூடிய சமூக மாற்றங்களை நாம் மதிப்பிட வேண்டும்.

மனித சமத்துவத்தை ஏற்பதற்கு இந்து மதங்களுக்குள் உள்ள தடைகட்கு எதிரான போராட்டம் வெறுமனே சமய நம்பிக்கைகளும் சடங்கு சம்பிரதாயங்களும் பற்றிய சீர்திருத்தங்களுடன் நின்றுவிட முடியாது. அது ஈற்றில் ஒரு பண்பாட்டுப் புரட்சியின் வடிவை எடுத்தேயாக வேண்டும். எனினும் அது சமூகத்தில் ஏற்படக் கூடிய அடிப்படை மாற்றங்களின் ஒரு பகுதியாக அமைய இயலுமே ஒழிய அதற்குப் புறம்பாக அல்ல என்பதையே இரண்டாயிரமாண்டு காலச் சீர்திருத்தங்களின் அனுபவம் உணர்த்துகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கு கிழக்கு இணைப்பின்றி அதிகாரங்கள் பகிரப்பட முடியாது

வடக்கு கிழக்கு மகாணங்களை வெவ்வேறாக பிரிப்பதற்கான பேரினவாதிகளின் விருப்பம் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புடன் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தின்படி மாகாணசபை அறிமுகமானது. அதன்படி வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் ஜனாதிபதியின் பிரகடனத்தின் மூலம் இணைக்கப்பட்டு ஒரு மாகாண அலகாக அமைக்கப்பட்டு மாகாண சபையாக அறிவிக்கப்பட்டது. 1988 நவம்பர் 19 ஆம் திகதி வட க்கு கிழக்கு மாகாணசபை தேர்தல் நடைபெற்றது. அது 1990 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது. அதிலிருந்து அங்கு தேர்தல் நடைபெறவில்லை. அம்மாகாண விவகாரங்கள் ஆளுநராலும் அதிகரிகளாலும் கவனிக்கப்பட்டு வருகின்றன. திம்பு பேச்சுவார்த்தையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் பாரம்பரிய தமிழர் தாயகமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது பின்னர் இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தின்படி ஒரே மாகாண அலகாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாகாணசபை முறைமையை ஏற்படுத்துவதற்காக 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பிற்கு செய்யப்பட்ட 13வது திருத்த ஏற்பாட்டின்படி அருகருகே இருக்கும் இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே மாகாண அலகாக ஒரே மாகாணசபையாக இயங்க பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. இது மாகாணங்கள் இணைக்கப்படுவதற்கான அடிப்படையான தேவை ஆகும்.

இதைத்தவிர மாகாணசபை சட்ட ஏற்பாடுகளின்படி இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் ஒன்றாக இணைந்து ஒரே மாகாண சபையாக செயற்பட ஜனாதிபதி பிரகடனஞ் செய்யலாம். அப்பிரகடனத்தின் மூலம் இணைக்கப்பட்ட மாகாண

## பேரினவாதத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு கிழக்கின் தமிழ் – முஸ்லீம் மக்கள் பலியாகக் கூடாது

ங்கள் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு குறிப்பிட்ட மாகாணங்களிலுள்ள மக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். வாக்கெடுப்பை ஜனாதிபதி அவரது தன்மதி அதிகாரத்தை கொண்டு தொடர்ந்து ஒத்திவைக்கலாம்.

வடக்கு கிழக்கு மாகாண இணைப்பை பொறுத்தவரையில் அம்மாகாணங்களிலுள்ள தீவிரவாத அமைப்புக்கள் ஆயுதங்களை அரசாங்கத்திடம் கையளித்தபிறகு அங்கு மோதல் இல்லாத நிலை ஏற்படுத்தப்பட்டப் பின்பே ஜனாதிபதி இணைப்பிற்கான பிரக்டனத்தை செய்யலாம். அதன்பிறகு வடக்குடன் தொடர்ந்து இணைந்திருப்பதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கான அபிப்பிராய வாக்கெடுப்பை கிழக்கு மாகாணத்தில் நடத்த ஜனாதிபதி திகதியை நிர்ணயிக்கலாம். அத் தேர்தலையும் ஜனாதிபதி தொடர்ந்து ஒத்திவைக்கலாம்.

தீவிர்வாத குழுக்கள் ஆயுதங்களை முற்றாகக் கையளிக்காத நிலையிலும் அங்கு மோதலற்ற நிலை உறுதிசெய்யப்படாத நிலையிலும் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்திருக்க வேண்டுமென்ற பிரகடனத்தை அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா செய்தார் என்றும் அது மாகாணசபை சட்டத்திற்கு முரணானது என்றும் அதனால் அப்பிரகடனஞ் செல்லுபடியற்றதென்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் சட்டத்திற்கு முரணாக இணைக்கப்பட்டுள்ளதால் கிழக்கு மாகாண மக்கள் அவர்களுக்கென தனியான மாகாணசபையை அமைப்பதற்கான உரிமையை இழந்துவிட்டனர் என்று ஜே.வி.பி. உறுப்பினர்கள் அடிப்படைமீறல் மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். அம்மனு மீதான விசாரணையின் பின்னர் தீர்ப்பளிக்கும் போதே உயர் நீதிமன்றம் வடக்கு கிழக்கு இணைப்பு செல்லுபடியற்றது என்று தீர்ப்பளித்துள்ளது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம். அப்பிரதேசம் புராதான வரலாற்றுக் காலத்தில் எந்த ராஜ்யத்திற்கு கீழ் இருந் தது என்பதை விட அப்பிரதேசத்தில் தமிழர்கள் தொடர்ச்சியாக கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பிருந்தே வாழ்ந்து வந்த தமிழ்ப் பிரதேச அடையாளம் என்பது நிரூபணமானது. 1948 ஆம் ஆண்டிற்குப் பிறகு இலங்கையின் பேரினவாத அரசாங்கங்கள் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களப் பேரினவாத குடியேற்றங்களை செய்து அப்பிரதேசத்தில் தமிழ் மக்களின் குடிப்பரம்பலை உள்நோக்குடன் குறைத்தன.

1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பேரினவாதத் தாக்குதல்களினால் இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ்மக்கள் தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர். அப்பிரதேசங்களில் பாதுகாப்பற்றவர்களானார்கள். அவ்வாறே பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மலையகத் தமிழ் மக்களும் தொடர்ந்து இனவாத தாக்குதல்களுக்கு ஆளானார்கள்.

1980 களுக்குப் பிறகு வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவ அடக்கு முறைகள் கட்டவீழ்த்து விடப்பட்டன. 1983 ற்கு பின் பேரினவாத யுத்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் வடக்கு கிழக்கு தமிழ்மக்கள் ஒரு பொதுவான தேசிய இன அடையாளத்தை எடுக்கவும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதை வலியுறுத்தவும் வேண்டிய நிலை ஏற்பட்டது. இதுவே தமிழ் மக்களின் மீதான பேரினவாத ஒடுக்கலுக்கு எதிரான நிலைப்பாட்டிற்கு மிகவும் அடிப்படையாக அமைந்தது. வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற அடிப்படையிலேயே "தனிநாடு" கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இந்த கோரிக்கை, தமிழ்மக்களின் எதிர்ப்பு போராட்டம் என்பனவற்றுக்கு மத்தியிலும் இலங்கையின் பேரினவாத அரசாங்கங்கள் தொடர்ச்சியாக வடக்கு கிழக்கு தமிழ்மக்களின் பிரதேசமாக இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் பல திட்டங்களை முன்னெடுத்து வந்தன என்பது நோக்க வேண்டியதாகும்.

இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தம் செய்யப்படுகின்ற போதும் இலங்கை அரசாங்கமோ பேரினவாத சக்திகளோ வடக்கு கிழக்கை இணைப்பதற்கு விருப்பம் கொண்டிருக்கவில்லை. விருப்பமில்லாத நிலையிலேயே இணைப்பு பற்றிய தெளிவற்ற சட்ட ஏற்பாடுகளுடன் மாகாணசபை சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்த தெளிவற்ற நிலையை பயன்படுத்தியே ஜே.வி.பி. உயர்நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்து அதற்கு தேவையான வடக்கு கிழக்கு பிரிப்பை தீர்ப்பாக பெற்றுக்கொண்டது.

மாகாணசபையை எதிர்த்த ஜே.வி.பிக்கு கிழக்கு மாகாணமக்களுக்கிருக்கும் தனியான மாகாணசபையை அமைத்துக் கொள்ளும் உரிமை பற்றி எவ்வித அக்கறையும் இருக்க முடியாது. தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளுக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் அடிப்படை வடக்கு கிழக்கு மாகாணம் இணைந்த பிரதேசமாகும்.

வடக்கு கிழக்கு மாகாணசபை 1990 ஆம் ஆண்டிற்குப் பிறகு இயங்காது ஆளுநரின் ஆட்சியின் கீழே இருந்து வருகிறது. அவ்விரு மாகாணங்களும் கடந்த 18 வருடங்களாக இணைக்கப்பட்டதாகவே இருந்து வருகின்றன. அந்த இணைப்பு உயர்நீதிமன்ற தீர்ப்பை அடுத்து செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள அதிகமான முஸ்லீம் கட்சிகளின் தலைவர்களும் தமழீழ விடுதைலைப்புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற கருணாவும் வடக்கு கிழக்கு இணைப்பை விரும்பவில்லை எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

வடக்கு கிழக்கு இணைப்பிற்கு தெரிவிக்கப்படும் எதிர்ப்பு அதிகாரத்தை கையிலெடுக்கும் அடிப்படையிலோ பேரினவாதிகளை குளிர்மைப்படுத்தி அவர்களின் தயவில் வாழ்வதை அடிப்படையாகக் கொண்டதாகவோ இருக்கக்கூடாது.

ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களின் பலமான அரசியல் அடையாளம் அரசியல் பலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும். முஸ்லீம் மக்களினது நலன்களும் பாதுகாப்பும் பேரினவாதத்தால் உறுதி செய்யப்பட முடியாது. ஆதலால் பேரினவாதத்திற்கு துணைபோக விரும்பும் முஸ்லீம் தலைவர்களால் முஸ்லீம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது. இதுவரை அத்தலைவர்களால் செய்ய முடியாதவற்றை கிழக்கைப் பிரிப்பதன் மூலம் செய்யலாம் என்பது பகற்கனவாகும்.

விமர்சிக்கப்படுகின்ற "யாழ்ப்பாண மேலாதிக்கம்" பற்றிய அச்சம் கிழக்கு மாகாண தமிழ் மக்களிடமிருந்து போக்கப்படுவதற்கான தமிழர் தலைமைகளிடமிருந்து வெளிப்படையான கொள்கைகளும், நம்பிக்கையான நடவடிக்கைகளும் அவசியமாகின்றன. அதேபோன்று முஸ்லீம் மக்கள் மீதான 'தமிழர் மேலாதிக்கம்' குறித்த அச்சமும் போக்கப்பட வேண்டும். இதற்கான நம்பிக்கையூட்டக் கூடிய தொடர்ச்சியான நடவடிக்கைகள் அவசியமாகின்றன. இவை பேரினவாத சூழ்ச்சிகளை முறியடிக்க வேண்டி அடிப்படை நிலைப்பாடுகளாகும். ஆகக் குறைந்தது இவற்றினூடாகவே வடக்கு கிழக்கு இணைப்பிற்கான களநிலைமையை சரி செய்யலாம். அதன் மூலமே குறுகிய பிரதேச, இன, மத வாதங்களுக்கு எதிராக செயற்படமுடியும்.

இலங்கையின் பேரினவாத அரசாங்கங்கள் நிபந்தனையுடனான வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொண்டே இதுவரை செயற்பட்டன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி கிழக்கு மாகாண மக்களின் விருப்பத்தை அறிவதற்கான அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தப் போவதாக கூறிவந்தார்.

உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டியதில்லை. ஆனால் பாராளுமன்ற சட்டத் தின் மூலமே வடக்கும் கிழக்கும் ஒன்றிணைக்கப்படலாம். ஐ.தே.கட்சி வடக்கு கிழக்கு இணைப்பிற்கு ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளது. மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் விரும்பினால் பாராளுமன்றத்தில் சட்டத்தை ஆக்கி வடக்கு கிழக்கை இணைக்கலாம். மஹிந்த ராஜபக்ச இணைப்பிற்கு ஆதரவானவரல்ல என்பதால் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படமாட்டாது என்றே நம்பலாம்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக வடக்கு கிழக்கில் யுத்தநிறுத்த மீறல்கள் அதிகரித்து யுத்தம் வெடித்துள்ளது. கொலைகள் காணாமல் போதல், கடத்தல்கள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. இதற்கு மத்தியில் ஜெனிவா பேச்சுவார்த்தைகள் பற்றியெல்லாம் கலந்துரையாடப்படுகிறது.

இணைந்த வடக்கு கிழக்கு இல்லாமல் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய அரசியல் தீர்வு என்பது சாத்தியமில்லை. அதற்கான பேச்சுவார்த்தைகளும் வெற்றியளிக்கப் போவதில்லை.

1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய சமாதான உடன்பாட்டினால் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகள் உறுதி செய்யப்படவில்லை. வடக்கு கிழக்கு இணைப்பு என்பது பலவீனமானதாக இருந்தது. அவ்வுடன்பாட்டின் மூலம் மாகாணங்களுக்கு மத்திய அரசாங்கத்தின் சில அதிகாரங்கள் கையளிக்கப்பட்டன. அது வரவேற்கப்பட்டாலும் வடக்கு இணைப்பு அதற்கான பூரணசுயாட்சி என்பன அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் அமையவில்லை.

அதனால் எதிர்கால பேச்சுவார்த்தைகளும், தீர்வுகளும் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையை விட அதிக பட்சமானதாகவே இருக்க வேண்டும். அவ்வுடன்பாட்டில் உறுதி செய்யப்பட்ட விடயங்களை மறுப்பதாக அமையக்கூடாது.

தமிழ்மக்கள் பிரிந்து சென்று தனியான் அரசை நிறுவுவதை எதிர்ப்பதாகக் கூறி அவர்களது தேசிய அபிலாஷைகளை மறுக்கும் வகையில் பேரினவாத நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனால் பிரிவினையை தடுத்து நிறுத்த முடியாது. தமிழ் மக்கள் பிரிந்து செல்வதற்கான தேவையை இல்லாமலாக்கும் அளவிற்கு அதிகாரங்கள் போதியளவிற்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு இருக்கின்ற சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கி வழங்கப்பட்டதாக இருக்கலாம். அத் தீர்ப்பு தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளுடன் இணங்கி வழங்கப்படவில்லை. யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் எய்தப்படுவதற்கு நிபந்தனை தமிழ்மக்களுக்கு உயர்ந்தபட்ச அதிகாரத்தை பகிர்ந்து கொடுப்பதாகும். அந்த உயர்ந்த பட்ச அதிகாரத்தை பகிர்வதற்கான நிபந்தனை வடக்கு கிழக்கு இணைப்பாகவும் இருக்க வேண்டும். இதுவே தேசிய இனப்பிரச்சினையினது யதார்த்தமுமாகும்.

---

***சட்டத்தரணிகளே........***

5ம் பக்க தொர்ச்சி

தற்கும் பாதகமாகவே இருக்கும். இங்கு கூறப் பட்டவிடயங்களை ஒரு சட்டத்தரணிக்குரிய விடயமாகவன்றி சட்டத்தரணிகள் சமூகத்திற்குரியதாகும். அச்ச மூகம் எந்தவொரு எதேச்சதிகாராத்திற்கும் ஆதிக்கத்திற்கும் இசைந்து போனால் சாதாரண மக்கள் பாதிக்கப்படுவர். சட்டத்தரணிகள் சமூகம் தொழில் ரீதியில் சிறப்புரிமை கொண்டதாக இருப்பதாகவே நம்பப்படுகிறது. அவர்கள் குற்றாவளிகள் போன்று நடத்தப்படக்கூடாது. சட்டத்த ரணிகள் சமூகம் அதன் சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

அச்சுதந்திரத்தை பாதுகாத்துக்கொள்ள உலகெங்கும் சட்டத்தரணிகள் சமூகம் போராடி வருகிறது. இந்தியாவில் சட்டத்தரணிகள் சமூக நோக்குடன் அவர்களின் சுதந்திரத்திற்காக தொடர்ந்து போராடி வருகின்றனர். இலங்கையில் இந்நிலைமையை காண முடிவதில்லை. இவ்விடத்தில் நாஜி ஜேர்மனியில் போதகர் மார்டின் நீய்மொலர் கூறியதை நினைவுபடுத்திக் கொள்வது நல்லது. நாஜிகள் யூதர்களிடம் சென்றபோது நான் யூதன் அல்ல வென்பதால் மௌனமாக இருந்தேன். "அவர்கள் கம்யூனிஸ்ட்களிடம் சென்றபோது நாம் கம்யூனிஸ்ட்டிடுஇல்லை என்பதால் மௌனமாக இருந்தேன். சமூக ஜனநாயக வாதிகளை சிறைகளில் அடைத்த போதும் நான் சமூக ஜனநாயகவாதி இல்லை என்பதால் மௌனமாக இருந்தேன். நாஜிகள் தொழிற்சங்கவாதிகளை தேடிய போதும் நான் தொழிற்சங்க வாதியல்ல என்பதால் எதையுமே பேசவில்லை. இன்றுதியில் என்னைத் தேடிவந்த போது எனக்காக பேசுவதற்கு எவருமே இருக்கவில்லை"


ஆசிரியர் குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## இயற்கையின் பரிசு:

கடந்த100 வருடங்களில் என்றுமே பார்த்திராத காட்சியை இப் போது அவுஸ்திரேலியா சந்திக்கிறது. இதனையடுத்து அவுஸ்திரேலியப் பிரதமர் 210 மில்லியன் பவுண்களை புவி வெப்பமடைதலைத் தடுப்பதற்காகக் கொடுத்திருக்கிறார். புவி வெப்பமடைதலைத் தடுக்க எல்லோரும் முழு மனதோடு உழைக்க வேண்டும் எனவும் வேண்டியிருக்கிறார். இத்தனைக்கும் புவி வெப்பமடைதல் தொடர்பான கியோட்டோ பட்டயத்தில் கையெழுத்திடாத தொழில்துறை சார் நாடுகள் அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவுமே. அமெரிக்காவின் சொல்லுக்கு தாளம் போடத் தொடங்கினால் இயற்கை கூட இப்படித் தான் பரிசளிக்கும் போல.

## விருதும் விளக்கமும்:

தாய்லாந்தின் மன்னர் உலக உணவுப் பரிசின் அதியுயர் பரிசான பார்லெக் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவிருக்கிறார். உலகளாவிய ரீதியில் அவரது மனிதாபிமான செயற்பாட்டிற்காக அவருக்கு இவ்விருதை வழங்குவதாக அமெரிக்காவிலிருந்து இயங்கும் உலக உணவுப் பரிசு அமைப்பு தெரிவிக்கின்றது. 1946ம் ஆண்டு முதல் மன்னராக இருக்கும் இவருக்கு இப்போது ஏன் தீடிரென பரிசுக்கௌரவம் வழங்கப்படுகிறது? மேலதிக தகவல: தாய்லாந்தில் இடம்பெற்ற இராணுவச் சதிப்புரட்சியை மன்னர் ஏற்றுக் கொண்ட தோடு அதை அங்கீகரித்து அவர்களிடம் ஆட்சியையும் ஒப்படைத்தார். அந்த ஆட்சியை அமெரிக்கா மனநிறைவோடு ஆசீர்வதித்துக் கொண்டது.

## ஒப்புதல் வாக்கு மூலம்:

எவ்வளவு தான் வீரம் பேசினாலும் பொய்களை அள்ளி வீசினாலும் ஒரு நாள் உண்மையை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். அமெரி க்க ஜனாதிபதியாக புஷ் அண்மையில் ஆற்றிய உரையொன்றில் வியட்னாமுக்கும் ஈராக்குக்கும் இடையே ஒற்றுமைகள் இருப்பதாகவும் ஆனால் எந்தவொரு வெற்றியைப் பெறவும் ஒரு விலையைக் கொடு த்தாக வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். ஈராக்கை முழுமை யான ஜனநாயக நாடாக்கிவிட்டுத்தான் அமெரிக்கப் படைகள் திரும் பும் என்று இன்னமும் சொல்லி வருகிறார் திரும்புவது என்னமோ உறுதி தான். ஆனால் உயிருடனோ? பிணமாகவோ? என்பதுதான் கேள்வி......

## அணுக்குண்டுச் சோதனைகள் பற்றி........

வடகொரியா அணுகுண்டுப் பரிசோதனையைச் செய்தது என்னமோ உலக மகாகுற்றம் மாதிரியும் வேறுயாரும் இதைச் செய்யாதது போலவும் குழல் மாசடைய இது காரணமாகின்றது எனவும் பலவாறான அறிக்கைகளும் எதிர்ப்புப் பேரணிகளும் இடம் பெற்றன. சட்டா ம்பித்தனம் பண்ணும் அமெரிக்கா இதுவரை 1,127 அணுகுண்டுப் பரிசோதனைகளைச் செய்துள்ளது. இதில் ஹிரோசிமா, நாகசாகியும் அடக்கம். இதில் 217 வளிமண்டலத்தில் செய்யப்பட்டவை. அணுகுண்டுகளை தீசி மனித உயிர்களைக் கொன்றுவித்த பெரு மையும் அமெரிக்காவையே சேரும். இத்தனையும் இருக்க வட கொரியா செய்த ஒரேயொரு அணுகுண்டுப் பரிசோதனையைப் பற்றி ஏன் இவ்வளவு கத்தல்கள் ஏனென்றால்? எல்லாம் தனக்கு மட்டு ந்தான்.

## இன்னுமொரு சுவர்:

இஸ்ரேல் பாலஸ்தீன நிலப்பரப்புகளையெல்லாம் விழுங்கி ஒரு மிகப்பெரிய நீளமான சுவரை கட்டி முடிக்கும் தறுவாயில் உள்ளது. இதை எதிர்த்து ஐ. நா முதல் சர்வதேச நீதிமன்றம் வரை தீர்ப்பு வழங்கிய பின்னரும் சட்டத்தின் சவாலான அமெரிக்காவின் அனுக்கிர கத்துடன் இங்கும் சுவரை கட்டிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் அமெரிக்க செனட் அமெரிக்க-மெக்சிக்கோ எல்லையில் 1, 100 கி. மீ நீளமான அவரைக் கட்ட அனுமதியளித்துள்ளது. மெக்சிக்கோவில் இடம்பெறும் கிளர்ச்சிகள் அமெரிக்காவைப் பாதிக்காது இருக்கவும் சட்டவிரோதமாக மக்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதைக் தடுக்கவுமே இது கட்டப்படுவதாகச் சொல்லப்படுகிறது. புரட்சிகள் என்ன அவர்கள் சுவர் கட்டி தடுத்து நிறுத்தக் கூடியவைகளா?

"நாடுகளுக்கிடையே சுவர்களே இருக்கக் கூடாது. எல்லைகள் என்பது மலர்ப்படுக்கைகள் மாதிரி ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவே" இவ்வாறு பெர்லின் சுவர் தொடர்பில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன். எப். கென்னடி கூறியது நினைவிற்கு வருகிறது.

# சட்டமெல்லாம் எனக்கல்ல

அமெரிக்காவுக்கு எதிரானவர்கள் என்று அமெரிக்கா கருதுபவர்களைஉலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து சர்வதேச சட்ட த்தின் (?) முன்நிறுத்தி பல பத்துத் குற்றங்களைக் காட்டி தண்டனை பெற்றுக் கொடுக்க அமெரிக்கா தவறுவதில்லை. ஆனால் பிறநாடுகளில் தவறுகள் செய்த பலரை தனது நட்பு அடைக்கலம் கொடுத்து வைத்திருக்கிறது. ஆனால் மனித உரிமைகள் குறித் தெல்லாம் வாய்கிழியப் பேசுகிறது. பல்லாயிரக் கணக்கானோரைப் படுகொலை செய்த முன்னாள் பொலிவிய ஜனாதிபதி கொண்சாலோ சாந்செல் டி வொசாடாவும் தென்னமெரிக்காவெங்கும் அமெரிக்க சார்பு சதிகளை அரங்கேற்றி பல்லாயிரக் கணக்கானோரைப் படுகொலைகளுக்கும் காணாமல் போத ல்களுக்கும் காரணமாயிருந்த லூயிஸ் பொசாடோ கலிவ் வெவ் ஆகியோர் முக்கிய மானவர்கள். இவர்களை பொலி விய மற்றும் வெனசுலேவா அரசுகள் தங்களிடம் ஒப்படைக் கும்படி கேட்ட போதெல்லாம் மனித உரிமைகளின் அடிப்படையில் அவர்களை ஒப் படைக்க முடியாது என அமெரிக்கா பதிலளி க்கிறது. மனித உரிமைகள் என்பது இதுதான் போலும்.

# தலைக்கு வந்தது

தென் கொரியா ஆளும் வர்க்கம் அமெரிக்காவின் செல்லப்பிள்ளை என்பதும் அமெரிக்கா சொல்வதற்கெல்லாம் தலையாட்டும் பொம்மையாக நீண்டகாலமாக இருந்து வரும் பெருமைக்குரிய நாடு என்பதுமே தென் கொரியாவின் வெளிப்படையான அடையாளமாகும். ஆனால் அண்மையில் தென் கொரியா அமெரிக்காவுடன் செய்துகொண்ட வர்த்தக ஒப்பந்தத்தை எதிர்த்து பல ஆயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறக்கிப் போராட்டம் நடத்தியது ஏகாதிபத் திய அடிமை விரும்பிகளுக்கு விழுந்த பெரிய அடியாகும். இவையெல்லாம் தொடக்கந்தான் இது தலைக்கு வந்தது. தலைப்பாகையோடு போகிற மாதிரி செயற்பாடு இல்லை.

# மூத்த பொதுவுடைமைப் போராளி முத்தையாவிற்கு இளைய தலைமுறையினரின் சிகப்பு அஞ்சலி

ஒவ்வொரு பொதுவுடமைவாதிக்கும் பின்னால் ஒரு வரலாறு இருக்கும் என்பது வெறும் வாக்கியம் அல்ல. தான் வாழுகின்ற சமூகச் சூழலில் காணப் படும் ஏற்றத்தாழ்வு சுரண்டல் சமூகநீதிமறுப்புகளைக் கண்டு வாளாதிருப்பது ஒரு நேர்மையான பொதுவடமைவாதிக்குரிய குணாம்சம் அல்ல. அநீதி அடக்குமுறை எந்த வடிவத்தில் வந்தாலும் அவற்றுடன் சமரசம் செய்யாது விட்டுக்கொடுக்காது போராடு வதே பொதுவுடைமைவாதிகளின் இறுதி மூச்சு வரையான வாழ்வியல் நடைமுறை. அந்தவகையில் கடந்த 20- 07-2006 அன்று தனது 84 வது வயதில் இயற்கை எய்திய சங்கானை நா. மான் முத்தை யாவின் வாழ்வும் பணியும் நினைவு கொள்ளப்பட வேண்டியதாகும். அவர் வடபுலத்து மூத்த பொதுவு டைமைவாதிகளில் ஒருவராக இருந்தவர். சங் கானைப் பிரதேசத்தில் மட்டுமன்றி வடபுலத்திலும் மக்களால் பொதுவடமைப் போராளிகளால் நன்கு அறியப்பட்டவர். அநீதி அடக்கு முறைகளை







புதிய ஜனநாயக கட்சியின் 25வது ஆண்டு விழாவில் கௌரவிக்கப்பட்ட மூத்த பொதுவுடைமை தோழர்களில் தோழர் முத்தையா ஒருவராக வலது புறத்தில் இருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் செஞ்சால்வையை தேசிய அமைப்பாளர் இ.தம்பையா அணிவித்து விருது வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்

எதிர்த்து நிற்பதில் மக்களோடு இணைந்த போராட்டங்களில் முன் நின்றவர். அவ்வாறே சங்கானைப் பட்டின சபையின் உறுப்பினராகவும் தலைவராகவும் இரு ந்து மக்கள் பணியாற்றியவர்.

தோழர் மான் முத்தையா மலேசியாவில் இருந்து திரும்பிய தனது இளமைக் காலத்தில் பொதுவட மைக் கட்சியின் வடபுலத்து தோழர்களுடன் இணைந்து சங்கானையில் வலிமேற்கில் கட்சியை மக்கள் மத்தியில் கட்டி எழுப்பியவர். மு.கார்த்திகே சன், அ. வைத்திலிங்கம், கே. ஏ. சுப்பிரமணியம், வீ.ஏ.கந்தசாமி போன்றவர்களுடன் இணைந்து பொதுவுடைமை இயக்கத்தை முன்னெடுத்தவர் களில் முக்கியமானவர்.

1966 ஒக்ரோபர் 21 எழுச்சி திசை காட்டிய புர ட்சிகர வெகுஜனப் போராட்டங்களில் முன் நின்ற பொதுவடமையாளர்களில் மான் முத்தையாவும் ஒருவர். சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர் த்த அன்றைய போராட்டத்தில் தனது உயர்த்தப்பட்ட சமூகத்தவர்களிடையேயான சாதி அகம்பாவம் கொண்டோரின் வெறித்தனங்களை எதிர்த்து மக்கள் போராட்ட முனையில் முன் நின்றவர் தோழர் முத்தையா. அதனால் பொலீஸ் நிலை யத்தில் சாதி வெறி பிடித்த பொலீஸ் சார்ஜன்ட் தாமோதரம்பிள்ளையின் மிருகத்தனமான தாக்குதலுக்கு உள்ளாகி சிறுநீரகப் பாதிப்புக்கு ஆளாகியவர். அத்துடன் தனது சொந்த வீடு சாதிவெறியர்களால் உடைக் கப்பட்டு அச்சூழலில் இருக்க முடியாது குடும்பமாக இடம் பெய ர்ந்து வாழ்ந்து வந்தவர். இத்தனை துனபங்களையும் தனது பொதுவுடைமை இலட்சியத்தினதும் மக்களின் பக்கம் நின்ற போராட்ட நிலைப்பாட்டினதும் பெயரில் ஏற்று வாழ்ந்தவர். அவரும் அவரைப் போன்றோரும் காட்டிய துணிவும் வீரமும் அர்ப்பணிப்பும் தான் அன்றைய போராட்டத்தின் உறுதியாகவும் வெற்றிகளாகவும் அமைந்தன.

அக்காலத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் வெறுமனே சாதிய அமைப்பாக அன்றி பொதுவுடைமைவாதிகள், இடதுசாரிகள், ஜனநாயகவாதிகள், நல்லெண்ணம் கொண்ட அனைவரினதும் ஐக்கியமுன்னணிப் போராட்ட அமைப்பாக விளங்கியது. தோழர் முத்தையா வெகுஜன இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராக இருந்து செயறபட்டார்.

இத்தகைய மூத்த பொதுவுடைமைத் தோழர் களை புதிய ஜனநாயக கட்சி தனது 25 வது ஆண்டு விழாவை 06- 07- 2003 ல் யாழ்ப்பாணத்தில் நடாத்திய போது செஞ்சல்வை அணிவித்து நினைவ விருது வழங்கிக் கௌரவித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் முத்தயைாவிட்டுச் சென்ற அந்த பொதுவடமைப் போராளிக்குரிய அடையாளத்தை இளந்த தலை முறைப் பொதுவுடைமை வாதிகள் கையேற்றுப் பாதுகாத்து அதனால் ஊட்டம் பெற்று இன்றைய சூழலில் உறுதியுடனும் துணிவுடனும் எழுந்துள்ள தேசிய சர்வதேசியச் சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னேற வேண்டும். அதுவே மூத்த பொதுவுடைமைப் போராளித் தோழரான முத்தையாவிற்கு நாம் செலுத்தும் அர்த்தமுள்ள சிகப்பு அஞ்சலியாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net                                                    நன்றி - நூலகத்திட்டம்



# போராளித் தோழருக்கு

போராளித் தோழரே கொஞ்சம் பொறும்.
சற்று நிதானித்து
நான் சொல்வதைக் கேளும்.
பயணம் நெடிதென்றும் பாதை கடிதென்றும்
சுமக்கும் பணியின் பாரம் பெரிதென்றும்
அறிவீர்- அத்துடன்
நின்று நிதானித்துப் போராடும் தேவையையும்
நன்கறிவீர் - ஆகவே
நான் சொல்வதைக் கேளும்.
ஆயுத வலிமையும் ஆள் வலிமையும்
போர்களை வெல்லப் போதியனவென்றால்
சாம்ராச்சியம் எதுவும் சாய்ந்தே இராது.
அமெரிக்காவும் இஸ்ரேலும் அராபியனின் மண்ணில்
ஆடிப்போக நேர்ந்தே இருக்காது- இது
ஆக்கிரமிப்பாளனுக்கான பாடம் மட்டுமல்ல,
ஒவ்வொரு போராளிக்குமானதுந்தான்
எந்த வொரு மண்ணினதும் எந்தவொரு மக்களதும்
எதிரி இன்னொரு தேசமோ இன்னொரு மக்களோ
அல்ல-
பணிய மறுக்கிற ஒவ்வொரு மண்ணும் மனிதனும்
எதிரிக்குப் பகைதான்- இது
எறியப்பட்ட ஒவ்வொரு ஏவுகணையும்
வீசப்பட்ட ஒவ்வொரு வெடியோடும்
தீர்க்கப்பட்ட ஒவ்வொரு ரவையும் சொல்கிற உண்மை.
வியற்நாம் முதல் லெபனான் வரை- இம் மண்ணின்
வடக்கு கிழக்கின் ஒவ்வொரு
அங்குலமும் அறிந்த உண்மை.
மக்களின் விடுதலையை
அந்நியர்கள் வழங்கியதில்லை- எனின்
மக்களின் விடுதலையை
மக்களுக்கு யாரோ வழங்குவர்?
மக்கள் வெல்லாதவரை எந்த வெற்றியும் வெற்றியல்ல.
மக்கள் ஏற்காதவரை
எந்தத் தோல்வியும் தோல்வியல்ல- ஆகவே
போராளித் தோழரே கொஞ்சம் பொறும்.

உமது பயணத்தை மக்களுடன் பகிரும்,
உமது பாதையை மக்களுடையதாக்கும்,
நீர் சுமக்கும் பணியின் கனம் இலகுவாகட்டும்.
எதிரி மேலும் மேலும் தனிமைப்பட நேருகிற போது-
வெற்றி
உம்முடையதாக மட்டுமன்றி
எங்களுடையதாக மட்டுமன்றி
எல்லா மக்களுடையதாகவும் அமையும்.

-சேகர்-


தாயகம்
வெளிவந்து விட்டது
(செப்ரெம்பர் - நவம்பர் இதழ்)
விற்பனையாகிறது.





# ஏ. ஜே. கனகரட்னா : நேரிய சிந்தனையாளர் நேர்மை மிகுந்த மனிதர்

ஏ.ஜே. என்று பலராலும் அறியப்பட்ட ஏ.ஜே. கனகரட்னா பொதுவாகவே அவரை அறிந்த எல்லாராலும் மதிக் கவும் நேசிக்கவும் பட்டவர். ஆங்கில வழிக் கல்வி பெற்ற ஏ.ஜே. தமிழில் எழுதவும் தமிழிலிருந்தும், தமிழுக்கும் மொழி பெயர்க்கவுமான விருப்பத்தை யொட்டித் தன் சொந்த முயற்சியாலேயே தனது தமிழ் அறிவை மேம்படுத்தியவர். அவரது சமூக நோக்கு முற்போக்கானது. எனினும் மொழிபெயர்ப்பில் உதவி கேட்டுப் போவோரது அரசியற் கருத்துக்கள் பற்றிய கவனிப் பின்றிப் பொறுப்புணர்வுடன் மொழிபெயர்த் துக் கொடுக்கும் பண்பு அவரது நல்ல மனதை அடையாளப் படுத்துவதாகும். யாரையும் புண்படுத்து வதை அவர் விரும்பாவிட்டாலும் அகங்காரமான தொனியில் நேர்மையற்று எழுதுகிறவர்களுடன் அவர் மிகவும் கடுமையாக மோதியிருக்கிறார்.

ஏ.ஜே. பல்கலைக்கழகத்தில் முதல்வகுப்பில் தேறி இருக்க வேண்டியவர். அவர் அவ்வாறு தேறாததற்கு அப்போது அவரது அக்கறைகள் அத்திசையில் இல்லா மையே காரணம். நிச்சயமாக இன்றைய பல தமிழ்ப் பேராசியர்களிலும் சிறப்பான தமிழிலக்கிய அறிவும் இலங்கையின் சிறந்த ஆங்கிலப் பேராசியர்களுக்கு நிக ரான ஆங்கில இலக்கிய அறிவும் அவரிடம் இருந்தன. ஆனால் அவர் பேராசிரியராகிறதை வாழ்வின் நோக்க மாகக் கொண்டவரல்ல.




அவர் யாழ் பல்கலைக்கழகத் தில் ஆங்கிலப் போதனாசிரி யராகப் பொறுப்பேற்றதற் கான காரணங்களும் சூழ லும் பலரும் விளக்க முயல் வது போல சிக்கலானவைய ல்ல. தனக்கு ஒரு தொழி லாக அதை அவர் தனது வாழ்வின் பிற்பகுதியி லேயே நாடிய காரணம் பல்கலைக் கழக பதவிக்கான ஏக்கத்தா லோ எதிர் பார்ப்புக்களாலோ அல்ல. எனவே தான் பல்கலைக்கழகத்தில் அவர் விரிவுரையாளர் பதவி பெறாதது பற்றிய பல வேறு மூர்க்கத்தனமான கருத் துக்களும் புறக்கணிக்க உகந்தன.

ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறப்பான ஒரு கட்டு ரையாளராக, தரமான ஒரு விமர்சகராக பொறுப் புணர்வுள்ள மொழி பெயர்ப்பாளராக நூல் தொகு ப்பாளராக அவர் தனக்கென ஒரு இடத்தைச் சம்பாதி த்துள்ளார். அவரது ஆற்றலுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர் தனது பேரில் எழுதியது குறைவு. பலரது ஆங் கில தமிழ் எழுத்துக்களைத் திருத்தி எழுத உதவியி ருக்கிறார். எதற்கும் அவர் நன்றியை எதிர்பார்த்த தில்லை. அவர் அதிகம் எழுதாததைச் சிலர் தமக்கு வாய்ப்பாகவும் பயன்படுத்தியுள்ளனர். தங்களை நவ மாக்ஸியர் எனவும் மாக்ஸியத்தைத் தாண்டிப் பார் க்கிறவர்கள் என்றும் சொல்லிக் கொண்டு மார்க்ஸிய எதிர்ப்புச் சேற்றில் புரளுகிற சிலர் அவரது குறிப்பான சில விமர் சனங்களை வைத்து அவரைக் கட்சி சார்ந்த கம்யூனிஸ்ட்டுகட்கு எதிரான ஒரு கட்சிசாரா மாக்ஸி யப் புனிதராகக் காட்ட முயன்று வந்துள்ளனர். ஆனால் அது உண்மைக்கு உடன்பாடான முயற் சி யல்ல.

எஸ்.வி. ராஜதுரையின் "எக்ஸிஸ்டென்ஷலிஸம்" பற் றியும் சுந்தரராமசாமியின் "ஜே.ஜே. சில குறிப்புக்கள்" பற்றியும் பேராசிரியர் சி. சிவசேகரம் 1980களில் எழுதிய விமர்சனங்கள் கொஞ்சங் கடுமையான வை என்று காலஞ்சென்ற தோழர் கே.ஏ.சுப்பிரமணிய த்திடம் அவர் குறிப்பிட்ட அதேவேளை, அந்த விமர் சனங்கள் சரியானவையே என்று ஏற்றுக் கொண் டார். இவை பற்றி ஏ.ஜேயின் நிலைப்பாட்டை மெச்சு கிற சிலர் பேச விரும்பமாட்டார்கள். பேராசிரியர் கைலாசபதி பற்றி டொமினிக் ஜீவா பரப்பிய அவதூறும் இடதுசாரிகள் பற்றி எஸ் பொன்னுத்துரையின் கீழ்த்தரமான பொய்களும் பற்றி ஏ.ஜே யின் மிகவும் கண்டனமான நிலைப்பாட்டைப் பற்றி அவர்கள் அறிவார்கள். ஆனால் பேசமாட்டார்கள். மு.தளை யசிங் கத்தின் சிந்தனைகளை அவர் மெச்சியவரல்ல. அதே வேளை அவரது எழுத்தாற்றலை அவர் மதித்தார். இதிலும் ஒரு பக்கம் மட்டுமே வலியுறுத்தப்படும்.

~காண்டீபன்~

ஏ.ஜே. எவரையும் தனிப்பட்ட முறையில் பகைக்காத தாலும் எல்லாருக்கும் உதவ ஆயத்தமாய் இருந்த தாலும் அவரிடம் தங்களுக்குச் சாதகமாக அமையும் விடயங் களை மட்டுமே எடுத்துச் சொல்வது பலருக்கும் வசதி யாகி விட்டது. இந்த நல்ல பண்பும் சந்தர்ப்ப சூழ்நிலைக ளால் ஒரு மாக்ஸியக் கட்சியைச் சாராததும் இயங் காமையும் ஏ.ஜே யின் பலங்களாகவும் பலவீனங்களா கவும் அமைந்தன என்பது தான் உண்மை. கனடா விலிருந்து வருகிற 'காலம்' என்ற ஏடு அவரை இடது சாரிகளின் எதிரியாகக் காட்ட முயன்றதை இங்கு குறிப்பிடலாம்.

பேராசிரியர் கைலாசபதியின் மறைவுக்குப் பிறகு அப் போது இடது கம்யூனிஸ்ட் கட்சியாயிருந்த புதிய- ஜனநாயக கட்சியின் மொழிபெயர்ப்புப் பணிகட்கு அவ ரது உதவி மிகவும் தேவைப்பட்டது. அதை வழங்க அவர் தயங்கியதில்லை. கட்சியின் நிலைப்பாட்டைப் பொது வாக அவர் ஏற்ற போதும் சில விடயங்களில் அவர் கடு மையாக முரண்பட்டார்.

விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழப் பிரிவினைக்கும் மிக ஆதரவான ஒரு நிலைப்பாட்டை ஆரம்பகாலத் தில் அவர் எடுத்த போது புதிய- ஜனநாயக கட்சி ஐக்கிய இலங்கை க்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான நிலைப் பாட்டை வற்புறுத்தியதற்காக அவர் கட்சியுடன் கடுமை யாக முரண்பட்டார். பின்னர் விடுதலைப்புலிகளின் நடை முறை அரசியலுடனும் பொதுவாகவே சீரழிந்த இயக்கங்களின் அரசியலு டனும் அவர் வெறுப்புற்றுப் போராளிகளைக் கடுமை யாக விமர்சித்த காலத்தில் புதிய- ஜனநாயகக் கட்சி தொடர்ந்தும் தனது நிலை ப்பாட்டில் உறுதியாயிருந் தது. அவர் கட்சியை பழைய தற்கு எதிர்க்கோணத்திலிருந்து விமர்சித்தார். எனினும் இரண்டு சூழ்நிலைகளிலும் கட்சியினருடன் கலந்து பேசிய பிறகு கட்சியின் நிலைப்பாட்டின் நியாயத்தை அவர் விளங்கிக் கொண்டார். ஏ.ஜே இவ்விடயத்தில் எதிரெதிரான அந்தங்கட்குப் போக வேண்டிய நிலைக்கு முக்கியமான காரணம், பிரச்ச னைகளை ஒரு ஸ்தாபனக் கண்ணோட்டத்தில் அரசியல் நடைமுறைச் செயற்பா ட்டை முன்வைத்து நோக்கவும் நிலைப்பாடுகளை விவாதங்களின் அடிப்படையில் வந்தடையவுமான வாய்ப்பு அவருக்கு இல்லாமையே. புத்திஜீவிகள் பிரச்சினையின் ஒரு பகுதியையோ சிலபகுதிகளையோ கண்டு மற்ற வற்றைக் காண இயலாமற் போவதற்கு முக்கிய காரணம் பலவேறு சமூகத்தளங்களிலும் பிரச் சினையை அணுகும் வாய்ப்பு இல்லாமைதான். இல க்கியம் பற்றிய அவரது சிந்தனைகளில் இருந்த ட்ரொட் ஸ்கியப் பாதிப்பிற்கும் நடைமுறை அரசியலு டனான தொடர்பின்மை பங்களித்திருக்கலாம். ஏ.ஜே யின் பன்முகப்பட்ட ஆளுமைகள் சமூகத்திற்கு மேலும் முழுமையாகப் பயன்படாமைக்கு அவரிடம் இருந்த தனிப்பட்ட பலவீனங்களும் காரணமாயின. எவ்வா றாயினும் உண்மைகள் எடுத் துக் கூறப்படுகிற போது எவரிடமிருந்து வந்தாலும் அவற்றை ஏற்கும் நேர் மையும் பணிவும் பண்பாடும் அவரை இன்றைய தமிழ்ப் புத்திஜீவிகளில் ஏகப்பட்டோரிடமிருந்து வேறுபடு த்திக் காட்டுகிறது.

ஏ.ஜே. என்றும் பொய்ப்புகழ்ச்சியை விரும்பியவரல்ல. அதில் ஈடுபட்டவருமல்ல. தன்னைப் பற்றிய நேர்மை யான விமர்சனங்களை விடப் பெரிய கவுரவம் எதை யும் அவர் என்றும் வேண்டியிருக்கவும் மாட்டார்.

அவரது பணிகளையும் பங்களிப்பையும் தொகுத்து நோக்குவோமானால் நம் கண்முன் ஒரு சிறந்த இல க்கிய அறிஞரும் மொழி பெயர்ப்பாளரும் கட்டுரையா ளரும் நேரிய சிந்தனையாளரும் மட்டுமன்றி உண்மை யான கம்யூனிஸ்ற் கட்சிகளையும் முற்போக்கான கொள்கைகட்காகவும் இலட்சியங்கட்காகவும் கடுமையாக உழைக்கிறவர்களையும் நேசித்து மதி த்து உதவிகள் செய்த ஒரு நேர்மையான, தன்னலங் கருதாத ஒரு நல்ல மனிதரை நாம் காண்போம்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று13 நவம்பர் 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 97

## புஷ் பற்றி சாவேஸ்

“நேற்றைய தினம் இங்கு ஒரு பிசாசு வந்து சென்றது. அந்த இடத்தில் இப்போதும் வெடிமருந்தின் நெடில் வீசிக்கொண்டே இருக்கிறது.”
ஐ. நா. சபையில் அமெரிக்க ஜனாதிபதி உரையாற்றிய மறுநாள் அங்கு உரையாற்றும் போது வெனிசுலாவேவின் ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



# பொது மக்கள் கொலைகள் நிறுத்தப்படுமோ?

இவ்வருடம் இதுவரைக்கும் 1339 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ள னர். ஐந்து மணித்தியாலங்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் மனித ர்கள் கொலை செய்யப்பட்டுள்ள னர். சமாதான நடவடிக்கைகளில் ஏற்பட்ட குழப்பத்தினாலும் யுத்த நிறுத்தம் மீறப்பட்டதனாலும் ஏற்ப ட்ட விளைவுகளில் சாதாரண மக் கள் கொல்லப்பட்டுள்ளமை மிகவும் பாரதூரமாகும். இக்கொலைகளில் பாதுகாப்பு படையினரும் விடுதலை ப்புலிகள் இயக்கமும், துணைப் படையினரும் சம்பந்தப்பட்டுள்ள னர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள் ளது. இத்தகவல்களை மனித உரி மைகளுக்கான இல்லம் வெளியி ட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் குறிப்பாகவும் அத ற்கு வெளியேயும் இவ் நாளாந்தப் படுகொலைக்கு ஆளாகுவோர் இளம் வயதினராகவும் இரண்டு மூன்று பிள்ளைகளுக்கு பெற்றோ ராகவும் சாதாரண உழைப்பாளர்க ளாகவும் உத்தியோகத்தர்களாக வும் இருப்பதை அவதானிக்க முடி கிறது. பேரினவாதத்திற்கும் ஏகாதி பத்தியத்திற்கும் இப் படுகொலை கள் உவப்பானவையாகும். தமிழர்க ளின் எண்ணிக்கை குறைவடைவ தும் அச்சத்தால் நாட்டைவிட்டுச் செல்வதும் பேரினவாதிகளுக்குத் தேவையானதாகும். அவ்வாறே இன்றைய உலகச் சூழலில் பின்தங் கிய நாடுகளில் உண்மையான பிர ச்சினைகளின் பக்கம் கவனம் திரும்பாது இளந்தலைமுறை வேறுபாடுகளை வைத்து தம்முள் அடிபட்டுக் கொல்லப்படுவதை அமெரிக்க ஏகாதிபத்தியம் வெவ் வேறு வழிகளில் ஊக்கப்படுத்தி வருகிறது. அவர்களது உள்நோக் கத்தை நிறைவேற்றிக் கொடுக்க எல்லாக் கொலையாளிகளுமே கைகளில் ஆயுதங்களோடு பழிக் குப் பழி போட்டிக்குப்போட்டி எனக் கொலைகளில் ஈடுபடுகின்றனர். இவற்றின் சமூகத் தாக்கத்தை எதிர்காலம் மிகவும் பயங்கரமாக அனுபவிக்கப் போகிறது என்பதை அறிவு பூர்வமாக சிந்திக்க முற்பட வேண்டும்.

சமாதான நடவடிக்கைகள் இன் னும் நடைபெறுவதாகவும் யுத்த நிறுத்தம் இன்னும் அமுலில் இருப் பதாகவும் எல்லாத் தரப்பினரும் கூறுகின்றனர். ஆனால் கடந்த ஒருவருடமாக குண்டுவெடிப்பு களும் தாக்குதல்களும் கொலைக ளும் கடத்தல்களும் தினம் தினம் நடைபெற்றுள்ள போதும் யுத்தம் நடைபெறவில்லை என்றே கூறப படுகிறது. இதுவும் ஒரு புதுமை யான நிலைமை தான்.

இத்தகவல்கள் வெளிவந்தப் பிறகு பாதுகாப்பு படையினரில் கொல்லப் பட்டவர்களின் விபரங்களும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின ரின் விபரங்களும் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

வடக்கு கிழக்கில் இடம் பெற்ற விமானக்குண்டுத் தாக்குதல்கள் பற்றி வெளிநாட்டு செய்திச் சேவை யொன்று இலங்கை அரசாங்கத் தின் பேச்சுவார்த்தைக் குழுவிற்கு தலைமை தாங்கிய அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வாவிடம் கேட்டபோது அவர் “விமானக் குண்டுத் தாக்குதல் பற்றி மட்டுமே கவலைப்படுகிறார்கள் கிளைமோர் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன என்பது பற்றியும் கவலைப்பட வேண்டும்” என்று ஆத்திரமடைந்த நிலையில் பதிலளித்துள்ளார். அண் மையில் ஜெனிவாவிற்கு பேச்சுவா ர்த்தைக்காக சென்றிருந்த போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாண குடாநாட்டி லும் வன்னியிலும் வசிக்கும் மக்களு க்கு போதியளவு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காத நிலையில் அங்கு மக்கள் பட்டினிக்கு முகம் கொடுக்கின்றனர். பட்டினிச்சாவு கள் ஏற்படக்கூடிய அவலமான நிலைமையே காணப்படுகின்றது. கடந்த மாதம் 28, 29ஆம் திகதிக ளில் ஜெனிவாவில் நடைபெற்ற பேச் சுக்களில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாத நிலையில் வடக்கில் தாக் குதல்கள் அதிகரித்துள்ளன.

‘சர்வதேச சமூகம்’ என்பது இலங் கையர்களது சடலங்களின் மீதும் அழிவின் மீதும் அதன் அக்கறையை நிலைநாட்டிக் கொள்வதையே உள் நோக்காகக் கொண்டு செயற்படு கிறது.

இதனை இலங்கையர்கள் புரிந்து கொள்வதாக இல்லை. பொதுமக் கள் மோதல்களில் நேரடியாக சம் பந்தப்படாதவர்களாவர். அவர்க ளை மனிதக் கேடயமாக வைத்து தாக்கு தல்களை நடத்துவதும், அவ ர்களை கொலை செய்து வதைக் கும் நடவடிக்கைகளை எடுப்பதும் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. எந்தக் கொலை யையும் நியாயப்படுத்துவது மனித நேயத்திற்கு ஏற்றதல்ல.





காணாமல் போனோரை கண்டறியும் குழுவின் ஏற்பாட்டில் கடத்தல் கொலை களை கண்டித்து கோட்டை புகையிரத நிலைய முன்பாக 01-11-2006 அன்று இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோரையும் அவர்கள் மத்தியில் விக்கிரமபாகு கருணாரத்தினா, சி.கா.செந்திவேல் மற்றும் முக்கியஸ்தர்களையும் படத்தில் காணலாம்.

## ஜெனிவாப் பேச்சு........

1ம் பக்க தொடர்ச்சி.....

அரசாங்கத் தரப்பால் அதற்குரிய ஒரு நகலையோ அல்லது ஒரு சட்டகத்தையோ கூட முன்வைக்க முடி யவில்லை. அவர்கள் கூறும் தீர்வு சர்வகட்சி மாநாட்டி லேயே முடிவு செய்ய இருப்பதாகவே அரசாங்கத்தரப்பு கூறிக் கொண்டமை அரசின் இரண்டகத் தன்மையை வெளிப்படுத்தியது. அது மட்டுமன்றி ஆறு லட்சம் வடபகுதி மக்கள் அத்தியாவசிய உணவு, எரிபொருள் மற்றும் அன்றாடத் தேவைகளைப் பெற முடியாத பேரவலத்திற்குள் சிக்கித் தவிப்பதை “சிறிய விடயம்” என அர சாங்கத்தரப்பினர் கூறிக் கொண்டமை பாரதூரமானதாகும். மக்களைப் பட்டினிக்குள் தள்ளிப் பணியவைப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை அவர் களிடமிருந்து அந்நியப்படுத்தி விடலாம் என்ற அடிப் படையிலேயே அரசாங்கம் ஏ 9 பாதை விடயத்தை கையாள முன்நிற்கிறது.

அதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கம் வடபுலத் தின் மனிதப் பேரவலத்திற்கு தீர்வு கொண்டுவர தமது விட்டுக் கொடுப்பை மாற்று நடவடிக்கை மூலம் முன் வைத்திருக்க வேண்டும். மக்களை அவலங்களுக்கு ள்ளும் அழிவுகளுக்குள்ளும் தவிக்கவிட்டு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என்பது நேர் மையாக உணரப்பட வேண்டும். அரசாங்கம் பேரின வாத ராணுவ ஒடுக்குமுறை வழி நின்று தனது இலக்கு களை வென்றெடுக்க முனைப்புக் காட்டிநிற்கும் சூழ லை எதிர் யுத்த வழிகளால் மட்டுமன்றி மக்களோடு இணைந்த மக்களை அந்நியப்படுத்தாத சரியான போராட்டத் தந்திரோபாயங்களையும் பயன் படு த்துவது அவசியம் என்பது முக்கியமாக கவனிக்கப் பட வேண்டும்.

அரசாங்கம் ஏ 9 தரவழிப்பாதையை தடுத்துள்ளது. விடுதலைப் புலிகள் கடல் வழிப் பாதைக்கு தமது இணக்கத்தை தெரிவிக்கவில்லை. அதே வேளை ஏ 9 பாதையைத் திறப்பதை புரிந்துணர்வு ஒப்பந்த அடிப் படை யில் வற்புறுத்தி நின்றனர். இதனால் எழுந்த முட் டுக்கட்டையால் வடக்கில் பட்டினிச் சாவை மனிதப் பேரழிவை நோக்கிய பேரவலம் உச்ச நிலை நோக்கிச் சென்று கொண்டி ருக்கிறது. அத்துடன் தொடர்ந்தும் படுகொலைகள் ஆட்கடத்தல்கள் பழிக்குப்பழி எனப் போட்டி போட்டு இடம் பெறுகின்றன. இந் நிலை அமெ ரிக்கா, ஐரோப்பிய யூனியன் போன்ற ஏகாதிபத்திய நாடுகள் ஐ. நா. வின் ஊடாக ராணுவத் தலையீடுகள் செய்த நாடுகளில் ஏற்பட்ட நிலைமைக்கு ஒப்பானதா கக் காணப்படுகின்றன. “மனிதப் பேரவலத்தையும் பட் டினிச் சாவையும் மனிதப் படுகொலைகளையும் தடுக் கவே உணவு மருந்து நிவாரணங்களும் படைகளும் கொண்டு செல்கின்றோம்” என்று கூறிக் கொண்டு உலகின் பல நாடுகளுக்கு ஏகாதிபத்திய சக்திகள் நேர டித் தலையீடுகள் செய்த வரலாற்று அனுபவம் அண்மை க்காலம் வரை நிகழ்ந்து வந்துள்ளது. அத்தகைய வழி முறையினூடாக இலங்கைக்குள்ளும் வந்திறங்கக் கூடிய புதிய அபாயச் சூழலை ஜெனிவாப் பேச்சுவார்த் தையின் தோல்வி ஏற்படுத்தியுள்ளது என்றே கருத வேண்டியு ள்ளது.

அவ்வாறான நிலைமை ஏற்படுமானால் அதற்கான முழுப் பொறுப்பையும் பேரினவாத ஆளும் வர்க்க சக் திகளும் ராணுவ ஒடுக்கு முறையை வளர்த்து வந்த யுத்த வெறிய ர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதே வேளை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை வெகுஜன அரசியல் போராட்டப் பாதை யிலும் குறுங் குழுவாதங்களுக்கு அப்பாற்பட்ட துமான மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டமாகவும் முன்னெ டுக்கத் தவறிய பொறுப்பை தமிழர் தலைமைகள் தட்டிக் கழித்துவிட முடியாது.

எனவே அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஜெனிவாப் பேச்சுவார்த்தையின் தோல்வியை இறுதியா னதாகக் கொள்ளக் கூடாது. இயல்பு வாழ்வு அனைத் தையும் இழந்து அவலங்களுக்கு உள்ளாகி நிற்கும் வட க்கு கிழக்கு மக்களுக்கும் சமாதானத்தையும் ஜனநாய கத்தையும் வேண்டிநிற்கும் ஏனைய மக்களுக்கும் நம்பி க்கை தரக் கூடிய வகையில் ஏ 9 பாதை யைத் திறக்க கூடிய வகையில் புதிய பேச்சுவார்த்தைக்கு முன் முயற்சி செய்வது அவசியம். அதுவே அவர்கள் முன்னால் உள்ள பாரிய பொறு ப்பும் கடமையுமாகும். அதனையே வடக்கு கிழக்கு மக்கள் உட்பட அனைத்து மக்களுக்கும் எதிர் பார் க்கின்றனர். அல்லாது விடின் முழு நாடும் மக்க ளும் மேன்மேலும் அழிவுகளுக்குள்ளும் அந்நிய நாசங்களு க்குள்ளும் அமிழ்ந்து கொள்வதைத் தடுக்க முடியாது.

# இன்னுமொரு மலையக சிறுமி ‘தற்கொலை’

மலையக சிறுவர் சிறுமியர்களை வீட்டுவேலைகளில் ஈடுபடுத்துவதற்காக செயற்பட்டுவரும் தரகர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். டிக்கோயா மாணிக்கவத்தை தோட்டத்தை சேர்ந்த 14 வயதுடைய சிறுமி ஒருவர் கொழும்பில் வேலை செய்த வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்வாறான சம்பவங்கள் மாதாந்தம் நடைபெறுவதாகத் தெரிகிறது.

மலையகப் பெற்றோர்கள் அவர்களது பிள்ளைகளை வீட்டு வேலைக்கு அனுப்புவதில்லை என்ற முடிவை எடுக்க வேண்டும். வீட்டுவேலைகளுக்கு செல்வோர் பலவிதமான அடக்குமுறைகளுக்கும் துஷ்பிரயோகங்களு க்கும் உள்ளாகின்றனர். சிலர் பிணமாக வீடுகளுக்கு அனுப்பப்படுகின்ற னர். அவ்வாறு அனுப்பப்படுகிறவர்களின் மரணத்திற்கான உண்மையான காரணங்கள் வெளிவருவதில்லை. அம்மரணங்களுக்கு காரணமானவர்க ளும் சட்டத்தின் பிடியிலிருந்து மிகவும் நாசூக்காகத் தப்பித்துக் கொள் கின்றனர்.

இன்று க.பொ.த சாதாரண தரம் உயர்தரம் படித்தவர்களும் வேறு வேலை யின்மையால் வீடுகளுக்கு வேலைக்காரர்களாக அனுப்பப்படும் நிர்ப்பந் தத்திற்கு ஆளாகின்றனர். இதற்கு மாற்று வழிகளைத் தேடிக்கொண்டு அதாவது வேறு வேலைவாய்ப்புக்களை தேடிக்கொண்டு மலையக சிறுவர் சிறுமியர்களை வீட்டு வேலைகளுக்கு அனுப்புவதில்லை என்று முடிவெடுப் பதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும்.

அத்துடன் ஆசை வார்த்தைகளைக் காட்டி நயவஞ்சகமாக மலையகத்திலி ருந்து வீட்டு வேலைக்காக சிறுவர் சிறுமியர்களை கூட்டிச் செல்லும் தரகர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண் டும். இத்தரகர்களும் தோட்டங்களில் வாழ்பவர்களே. இவர்கள் சகலவித த்திலும் சீரழிந்த நிலையில் இருப்பதுடன் மலையக இளம் தலைமுறை யினரையும் சீரழிக்கும் வேலைகளை செய்துவருகின்றனர். இவர்கள் சமூகத் துரோகிகள். இவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை களை எடுக்க வேண்டும்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A.K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்